விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 25 வெள்ளிக்கிழமை (09.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 021

## கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளின்படி

# மைத்திரி முன்னிலை

## இன்று மதியம் இறுதி முடிவு வெளியாகும்


(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் நேற்று நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் இன்று அதிகாலை 2.30 மணிவரை கிடைக்கப் பெற்ற முடிவுகளின்படி பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன முன்னிலை வகிக்கிறார்.

கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து 536 வாக்குகளின் அடிப்படையில் மைத்திரிபால சிறிசேன முன்னிலையிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 118 வாக்குகளைப் பெற்று அடுத்த இடத்திலும் உள்ளார்.

இதன்படி மைத்திரிபால சிறிசேன 56.06 வீதத்தில் முன்னிலையிலும் மகிந்த ராஜபக்ஷ 43.02 வீதத்திலும் காணப்படுகின்றனர்.

02ஆம் பக்கம் பார்க்க....



### கிளிநொச்சியில் மைத்திரி முன்னிலை

(கிளிநொச்சி)

ஜனாதிபதி தேர்தல் கிளிநொச்சி மாவட்ட முடிவுகள் வெளியாகியிருக்கும் நிலையில் 25 ஆயிரத்து 556 வாக்குகளால் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் வகிக்கின்றார்.

நேற்றையதினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வாக்கு எண்ணம் பணிகள் நடைபெற்று நள்ளிரவு நிறைவடைந்திருக்கும் நிலையில்,

38 ஆயிரத்து 856 வாக்குகளை பெற்று மைத்திரிபால சிறிசேன முன்

02ஆம் பக்கம் பார்க்க..

### ஊர்வலங்களுக்கு தடை விதிப்பு

(கொழும்பு)


நாட்டில் நேற்று முதல் ஒருவார காலத்திற்கு பட்டாசு கொளுத்துதல் மற்றும் ஊர்வலங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண இதனைக் கூறினார்.

தேர்தல் சட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறுவோரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## வன்முறைகளின்றி நடைபெற்ற தேர்தல்



(கொழும்பு)

நாட்டின் 7-வது ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு பாரதூரமான வன்முறைகளோ பெரிய அசம்பாவிதங்களோ இன்றி முடிவடைந்துள்ளது.

பல மாவட்டங்களில் 70 வீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ள நிலையில், இம்முறை வாக்குப்பதிவு உச்ச அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வாக்குப்பதிவு அமைதியான முறையில் நடைபெற்றதாக உள்நாட்டு,

23ஆம் பக்கம் பார்க்க....

### நாடளாவிய ரீதியில் 71 வீத வாக்குப்பதிவு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 71 வீதமானோர் வாக்களித்துள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்தது.

யாழ்.மாவட்டத்தில் 61.14 சதவீத வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலாளரும் தெரிவத்தாட்சிகருமான சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள 4 இலட்சத்து 50 ஆயிரத்து 132 வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற நிலையில் அவர்களின் 61.14 வீதமானவர்கள் வாக்களித்துள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களிலிருந்து வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. நெடுந்தீவு தேர்தல் தொகுதிக்கான வாக்குப்பெட்டிகள்

23ஆம் பக்கம் பார்க்க....

## கொழும்பில் இன்று விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்று மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற நிலையில் இன்று தேர்தல் இறுதி முடிவு அறிவிக்கப்படவுள்ளது.

இதன்போது ஏற்படும் அசம்பாவிதங்களை தவிர்க்கும் முகமாக இப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை அலரி மாளிகைக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. 800 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அலரி மாளிகையை சுற்றி பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்கவின் பணிப்புரைக்கு அமைய இவ்வாறு பொலிஸ் உத்தி

23ஆம் பக்கம் பார்க்க....

### வவுனியாவில் குண்டுவெடிப்பு

(குருமன்காடு)

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள வாக்குச் சாவடிக்கு பின்னால் கைக்குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைக்குண்டு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் விழுந்து வெடித்ததால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தைத் தொடர்ந்து பிரதேசத்தில் பொலிஸாரும் விஷேட

23ஆம் பக்கம் பார்க்க....

## வாக்களிப்பு நிலையம் அருகில் அல்வாயில் குண்டு வீச்சு!

### அச்சமின்றி வாக்களித்த மக்கள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை அல்வாய் பகுதியில் இருந்த வாக்களிப்பு நிலையம் அருகாமையில் இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் யாரும் காயமடைந்திராத போதிலும் அங்கு பெரும் பதற்றம் நிலவியதனை அவதானிக்க முடிந்தது.

நேற்றுக்காலை 11 மணியளவில் அல்வாயில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்திற்கு 500 மீற்றருக்கு அருகாமையிலேயே கைக்குண்டு வீச்சுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனந்தெரியாத நபர்களே இக் கைக்குண்டுத் தாக்குதலினை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் தேர்தல்

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கப் பெற்ற தபால் மூல வாக்குகள்

### மட்டக்களப்பு மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 1, 605
மைத்திரிபால சிறிசேன : 6, 816

பதிவு செய்யப்பட்டவை : 8, 815
அளிக்கப்பட்டவை : 8, 562
செல்லுபடியானவை : 8, 462
நிராகரிக்கப்பட்டவை : 100

### யாழ்ப்பாணம் மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 4, 607
மைத்திரிபால சிறிசேன : 10, 885

பதிவு செய்யப்பட்டவை : 17, 026
அளிக்கப்பட்டவை : 16, 191
செல்லுபடியானவை : 15, 737
நிராகரிக்கப்பட்டவை : 454

### திகாமடுல்ல மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 9, 713
மைத்திரிபால சிறிசேன : 11, 917

பதிவு செய்யப்பட்டவை : 22, 310
அளிக்கப்பட்டவை : 21, 869
செல்லுபடியானவை : 21, 711
நிராகரிக்கப்பட்டவை : 158

### காலி மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 16, 116
மைத்திரிபால சிறிசேன : 13, 879

பதிவு செய்யப்பட்டவை : 30, 883
அளிக்கப்பட்டவை : 30, 541
செல்லுபடியானவை : 30, 131
நிராகரிக்கப்பட்டவை : 410

### பொலனறுவை மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 4, 309
மைத்திரிபால சிறிசேன : 9, 480

பதிவு செய்யப்பட்டவை : 14, 213
அளிக்கப்பட்டவை : 13, 998
செல்லுபடியானவை : 13, 856
நிராகரிக்கப்பட்டவை : 142

### அம்பாந்தோட்டை மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 10, 295
மைத்திரிபால சிறிசேன : 5, 620

பதிவு செய்யப்பட்டவை : 16, 522
அளிக்கப்பட்டவை : 16, 160
செல்லுபடியானவை : 15, 973
நிராகரிக்கப்பட்டவை : 187

### பதுளை மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 13, 115
மைத்திரிபால சிறிசேன : 13,031

பதிவு செய்யப்பட்டவை : 27, 142
அளிக்கப்பட்டவை : 26, 683
செல்லுபடியானவை : 26, 259
நிராகரிக்கப்பட்டவை : 424

### மாத்தறை மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 13, 270
மைத்திரிபால சிறிசேன : 10, 382

பதிவு செய்யப்பட்டவை : 24, 395
அளிக்கப்பட்டவை : 24, 032
செல்லுபடியானவை : 23, 752
நிராகரிக்கப்பட்டவை : 280

### கேகாலை மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 14, 976
மைத்திரிபால சிறிசேன : 14, 163

பதிவு செய்யப்பட்டவை : 30, 536
அளிக்கப்பட்டவை : 29, 807
செல்லுபடியானவை : 29, 247
நிராகரிக்கப்பட்டவை : 560

### மாத்தளை மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 8, 483
மைத்திரிபால சிறிசேன : 8, 394

பதிவு செய்யப்பட்டவை : 17, 330
அளிக்கப்பட்டவை : 17, 069
செல்லுபடியானவை : 16, 923
நிராகரிக்கப்பட்டவை : 146

### இரத்தினபுரி மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 11, 864
மைத்திரிபால சிறிசேன : 9, 053

பதிவு செய்யப்பட்டவை : 21, 630
அளிக்கப்பட்டவை : 21, 302
செல்லுபடியானவை : 20, 976
நிராகரிக்கப்பட்டவை : 326

### மொனராகலை மாவட்டம்
மகிந்த ராஜபக்ஷ : 8, 281
மைத்திரிபால சிறிசேன : 7, 513

பதிவு செய்யப்பட்டவை : 16, 349
அளிக்கப்பட்டவை : 16, 059
செல்லுபடியானவை : 15, 847
நிராகரிக்கப்பட்டவை : 212

# ஆயுதங்களுடன் நடமாடிய நால்வர் குறித்து அச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு மிக உச்சக்கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் யாழ்.பேருந்து நிலையப்பகுதியில் கைத்துப்பாக்கிகளுடன் 4 பேர் நடமாடியமையினால் பெரும் பரபரப்பு உருவாகியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலுக்கான வாக்களிப்பு மாவட்டம் முழுவதும் உச்சளவில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் நேற்றயதினம் சுமுகமான வாக்களிப்பினை சீர்குலைக்கும் வகையில் மக்கள் மத்தியில் பலவிதமான வதந்திகள் பரப்பிவிடப்பட்டிருந்ததுடன், ஆங்காங்கே மக்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில் நேற்றயதினம் காலை 11.30 மணியளவில் யாழ்.மத்திய பேருந்து நிலையப்பகுதியில் கறுப்பு நிறத்திலான உடையணிந்த 4 நபர்கள் கைத்துப்பாக்கிகளுடன் நடமாடியதை மக்கள் பார்த்துள்ளனர்.

மேலும் குறித்த சம்பவத்தினால் மக்கள் பெரும் அச்சத்தில் ஆழ்ந்திருந்தமையினையும் காணமுடிந்தது.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அமைப்பிற்கு விடயம் தெரி யப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

எனினும் அவ்வாறு நடமாடியவர்கள் யார்? எதற்காக கைத்துப்பாக்கிகளுடன் நடமாடினார்கள்? அவர்கள் பொலிஸ் அல்லது படையினர் சார்ந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களா? என்பது தொடர்பில் உத்தியோகபூர்வ மான தகவல்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை. (எ-11)

# 10 ஆயிரம் முஸ்லிம்கள் வாக்களிக்க விடாமல் தடுப்பு

## அமைச்சர் ரிசாட் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பத்தாயிரம் இடம்பெயர் முஸ்லிம் வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததாக முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியூதீன் குற்றம் சுமத்தியுள்ளார்.

போக்குவரத்து பிரச்சினை காரணமாக இவ்வாறு குறித்த முஸ்லிம் மக்களுக்கு வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் முஸ்லிம் மக்கள் வாக்களிப்பதற்கு 20 பஸ்கள் தேர்தல் ஆணையாளரினால் ஒழுங்கு செய்யப்பட்ட போதிலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசியல்வாதி ஒருவர் இந்த ஏற்பாடுகளை முடக்கியதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனால் சுமார் பத்தாயிரம் வாக்காளர்கள் புத்தளம் மாவட்டத்தில் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சில இடம்பெயர் வாக்காளர்கள் முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட வேறு வழிகளின் ஊடாக வாக்களிக்கச் சென்றதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (எ-11)

# அதிகாலை 3.00 மணி நிலைவரம் ...



56.7 %

311,117 வாக்குகள்
மைத்திரிபால சிறிசேன



42.1 %

236,386 வாக்குகள்
மஹிந்த ராஜபக்ஷ

## மைத்திரி முன்னிலை...

நாடளாவிய ரீதியில் நேற்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

அதன் வாக்கு எண்ணும் பணிகள் நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் ஆரம்பமாகின.

இதன்போது முதலில் தபால் மூல வாக்கு எண்ணும் பணிகள் நடைபெற்றன. இத்தபால் மூல வாக்குகளின் அடிப்படையிலும் கிளிநொச்சி மற்றும் காலி மாவட்டத் தொகுதி வாக்குகளின் அடிப்படையிலும் ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து 536 வாக்குகளுடன் மைத்திரிபால சிறிசேன முன்னணி வகிக்கிறார்.

மகிந்த ராஜபக்ஷ ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 118 வாக்குகள் பெற்று இரண்டாம் நிலையிலும் காணப்படுகிறார். தபால் மூல வாக்குளின் படி காலி , யாழ்ப்பாணம், மாத்தறை, பொலன்னறுவை, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, மட்டக்களப்பு, மாத்தளை மற்றும் திகாமடுல்ல ஆகிய மாவட்டங்களின் பெறுபேறுகள் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்றன.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத் தேர்தல் தொகுதி, காலித் தேர்தல் தொகுதி என்பவற்றின் பெறுபேறுகளும் கிடைக் கப்பெற்றன. இவ்வாக்குகளின் அடிப்படை யிலேயே மைத்திரிபால சிறிசேன முன்னிலை வகிக்கிறார்.

22 தேர்தல் மாவட்டங்களில் 160 தேர்தல் தொகுதிகள் காணப்படுகின்றன. இதில் 19 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 பேர் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தனர். (எ-11)

## கிளிநொச்சி...

னிலை வகிப்பதுடன், 13 ஆயிரத்து 300 வாக்குகளை பெற்று மகிந்த ராஜபக்ஷ பின் தங்கியுள்ளார்.

55 ஆயிரத்து 826 அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் மைத்திரிபாலசிறிசேன 72 வீதமும், மகிந்த ராஜபக்ஷ 23 வீதமும் பெற்றுள்ளனர். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தொகை கள்ள வாக்குகள் பிடிபட்டன

உடுகம பெருந்தோட்ட பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்றினை சோதனையிடும் பொழுது தேர்தல் வாக்குகள் என சந்தேகிக்கும் ஆவணங்கள் சில பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட ஆவணங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளரை பொலிஸார் அணுகியுள்ளனர். மத்துகம, நராவல பாலர் பாடசாலை வாக்களிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படும் 150 போலி வாக்குகளுடன் பிக்கப் ரக வாகன சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாகனத்திற்குள் இருந்த மேலும் மூன்று நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை நேற்று ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்புகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 71 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. அவற்றோடு விசேட பாதுகாப்பு படை குழுவினரும் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். அதேநேரம் நாடு முழுவதும் நேற்று 420 வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன், 2 ஆயிரத்து 884 பொலிஸ் நடமாடும் சேவைகள் நடத்தப்படுகின்றன. தேர்தலை பாதுகாப்பாக நடத்துவதற்கு பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற்படவிருப்பதாகவும் வாக்களிப்பின் போது வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்காக அதியுச்ச பலத்தை பயன்படுத்த பொலிஸாருக்கு உத்தர விடப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வாக்களித்து நிறைவு செய்ததன் பின்னர், வாக்குச் சாவடிக்கு அருகில் அநாவசியமாக நிற்க வேண்டாம் என்றும் வாக்காளர்களிடம் வேண்டுக்கோள் விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

# உகண்டா ஆயுதக்குழுவின் தளபதி அமெரிக்க படையிடம் சரணடைவு

உகண்டா ஆயுதக் குழுவான லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மியின் மூத்த தளபதி ஒருவர் சரண டைந்துள்ளார் என்பதை அந் நாட்டின் இராணுவம் உறுதி செய் துள்ளது. அவர் அமெரிக்க-ஆபிரிக்கக் கூட்டுப் படைகளிடம் சரணடை ந்தார் எனவும் உகண்டா இராணுவம் தெரிவித்துள்ளது.

டோமினிக் ஓங்வென் எனும் அந்தத் தளபதி, தற்போது மத்திய ஆபிரிக்கக் குடியரசில் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறார் என உகண்டா இராணுவ த்தின் பேச்சாளர் கூறியுள்ளார். தற்போது சரணடைந்துள்ள டோமினிக் ஓங்வென் பத்து வய தாக இருக்கும்போது, அந்த ஆயுதப் படையினரால் கடத்தப்பட்டார்.

போர் குற்றங்களில் ஈடுபட்டார் எனும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளுக்காக, சர்வ தேசக் குற்றவியல் நீதிமன்றத்தால் அவர் தேடப்பட்டு வந்தார். உகண்டாவில் உருவான லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மி எனும் அந்த ஆயுதக்குழு கடந்த மூன்று தசாப்தங்களாக வன்முறையுடன் கூடிய போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது. கடந்த 30 ஆண்டுகளாக உக ண்டாவில் சர்வாதிகாரமான முறை யில் நடைபெறுவதாக அவர்கள் குற்றஞ்சாட்டும் யுவேரி முஸேவி னியின் ஆட்சி முடிவுக்கு வரவேண்டும் என்று அவர்கள் போராடி வருகின்றனர்.

அதன் போது கூட்டுப் படுகொலைகள் மற்றும் சிறார்களை அடிமைப்படுத்தி போராளிகளாக வைத்திருந்தது போன்ற பல செயல்களில் அவ்வமைப்பு ஈடுபட்டது.

அங்கு அவர்கள் இப்போது பலமிழந்துவிட்டாலும் கொங்கோ ஜனநாயகக் குடியரசு மற்றும் மத்திய ஆபிரிக்கக் குடியரசு ஆகிய நாடுகளிலிருந்து தொடர்ச்சியாக கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளார். (இ-5)


30ம் ஆண்டில் தடம் பதிக்கும் உங்கள் பயிற்சி நிலையம்

யாழ். கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)



- Nail art
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) மெஹந்தி போடுதல்



- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)





சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 18-01-2015 ஞாயிறு காலை 9.30 மணி

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 19-01-2015 திங்கள் காலை 9.30 மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-



ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி

veta Spoken English

Veta Fluency Diploma



புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| Mon,Wed,Fri: 9.30 a.m. Mon,Wed,Fri: 1.30 p.m. | Tue, Thu 10.00 a.m. Sat, Sun 3.30 p.m. | Mon, Wed, Fri 10.30 a.m. | Tue, Thu 8.30 a.m. |

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள் Duration: 3 Months

பல்கலைக்கழகம் செல்லவுள்ளோருக்கான விசேட பிரிவுகள்

DMI COMPUTER EDUCATION

UK விசாவுக்கான ஆங்கிலப்பரீட்சை — 2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை

IELTS
- Unique Test Tips
- Latest course Materials

IELTS பரீட்சை பதிவுகள் இலவசமாக எந்த கிளையிலும் மேற்கொள்ள முடியும்

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M. M. V. வீதி, (மந்திகை வைத்தியசாலை முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |


## இராசி பலன்

9.01.2015

(மார்கழி 25, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை- 6.25 மணிக்கு

சதுர்த்தி மாலை - 5.50 மணிவரை

மகம் மாலை-6.58 மணிவரை

இராகுகாலம் 11.02-12.32 மணிவரை

சுபநேரம் 6.32-8.02 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள்சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்துசேரலாம், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** வாகன யோகத்தால் வளம் காணும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் , புகழும் கிடைக்கும், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்** சகோதர ஒத்துழைப்புகள் அதிகரிக்கும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பயணங்களால் பலனுண்டு, முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**கடகம்** பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், உங்கள் வார்த்தைகளை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**சிம்மம்** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தேக நலமுண்டு.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் உருவாகும் வாய்ப்புண்டு, செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**துலாம்** திடீர் பணவரவுகள் மனதிற்கு மகிழ்ச்சி தரும்,பெருமையான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்கள் இல்லம் தேடி வரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், சாதுரியமாக பேசி சாதனை படைக்கும் நாள், புதிய திட்டங்களில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் நடந்து கொள்வது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** நிர்வாகத் திறமைகள் வெளிப்படும் நாள், நினைத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் நன்மை தரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

அமரர் திருமதி
சீவரட்ணம் உமாதேவி
(இளைப்பாறிய நெசவு ஆசிரியர்)

மலர்வு :- 17.03.1943
உதிர்வு :- 10.12.2014

கடந்த 10.12.2014 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் 07.01.2015 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 09.01.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பண்ணாகம், சுழிபுரம்.

இங்ஙனம் :
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(9096)

# Hotel Lux Etoilesன்

மீண்டும் ஓர் புதிய படைப்பு
பங்குனி 2015-ல் இருந்து **வெற்றி, யோகா**

என்ற பெயரில் சகல வைபவங்களுக்கும் ஏற்ற முறையில் இரு மண்டபங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

1. ஆடம்பர மண்டபம் (Deluxe)
2. அரை ஆடம்பர மண்டபம் (Semi Deluxe)
3. 7 பரப்பு காணியில் வாகனத்தரிப்பிடம்
4. நீச்சல் தடாகம் முன்னிலையில் அமைந்துள்ளது.
5. நல்லூர்க் கோவிலில் இருந்து 450 மீட்டர் தூரம் மட்டுமே
6. ஐந்து தர அறை கொண்ட ஆடம்பர விடுதி
7. மணவாளர்களுக்கு தேன்நிலவு, முதல் இரவு அறை இலவசம்
8. சைவ, அசைவ, உள்நாட்டு, ஐரோப்பிய, சீன உணவுகள்
9. உள்நாட்டு வெளிநாட்டுப் பானங்கள்
10. நடமாடும் உணவகம் கொண்ட உல்லாச BUS (Lux Amour)

**மண்டபத்திற்கு முற்பதிவு செய்யும் முதல் பத்துப் பேருக்கு 20 % கழிவு**

## Lux Rendez - Vous Hot and Cool Bar

யாழ்.மாவட்டத்திலேயே, ஒரேஒரு விடுதியின் பான அகத்தில் எந்த ஒரு உணவும் 320 /- க்கு மேல் விலைப்பட்டியலில் இல்லை என்ற நற்செய்தியையும் வாடிக்கையாளருக்கு தெரியத் தருகின்றோம்.

## LUX AMOUR BUS

இவ் ஆடம்பர BUS ல் ஒருவரை ஒருவர் முகம் பார்த்த வண்ணம் 32 பேர், நான்கு நேர உணவுடன் ஒரே நாளில் சகல யாழ் சுற்றுலாத் தலங்களையும் பார்த்து அனுபவிக்கலாம்.

★ ★ ★ Lux Etoiles & II
Lux Pizza, Francisco Varano Group
No. 34, Chetty Street Lane, Nallur, Jaffna
Tel : 021 222 3966, 072 222 3966 Fax: 021 222 0606
Email : reserve.luxetoiles@yahoo.com
www.luxetoiles.com

(C-9769)

2015-ம் ஆண்டின் ஜனாதிபதிக்கு எமது வாழ்த்துக்கள்

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உயிர் மூச்சு தந்து நின்ற எங்கள் உயிர் அம்மா
உண்மை எனும் தெய்வம் என உதித்த எங்கள் அம்மா
பயிரதுவாம் பாசமது - பரவி எங்கள் வீட்டில்
பண்புடனே தழைத்தோங்கச் செய்த எங்கள் அம்மா
அயலினையும் அன்பதுவால் அணைத்த எங்கள் அம்மா
ஆசிமழை பொழிந்து எம்மை ஆட்சி செய்த அம்மா
தெய்வம் எனும் வடிவில் எங்கள் வீட்டினிலே இருந்தீர்
தேடி நிதம் வாடுகிறோம் வந்து எம்மை அணைப்பீர்
ஆண்டு ஒன்று சென்றிடினும் அம்மா
உங்கள் உருவை அகத்திலும் புறத்திலும்
அழுதபடி தேடி அழைத்து நிற்கும்
பிள்ளைகளை பார்க்க எப்போ வருவீர்?

அமரர்

## கமலாதேவி சண்முகநாதன்

(அம்மாப்பிள்ளை)

பிறப்பு: 13.08.1948
இறப்பு: 20.12.2013
திதி: அபரபக்க சதுர்த்தி
(09.01.2015)

"ஞான தீபம்"
22/12, பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(9094)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் உணவகத்தில் குண்டுவெடிப்பு; 24 மணி நேரத்தில் மூன்றாவது சம்பவம்

## பெரும் பதற்றத்தில் பாரீஸ் நகரம்

(பாரீஸ்)

பிரான்சில் 2 ஆவது நாளாக 2 இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். லியோன் என்ற இடத்தில் உள்ள உணவகத்தில் வெடிகுண்டு வெடித்துள்ளது என பிரான்சில் உள்ள ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. இந்த குண்டு வெடிப்பில் யாருக்கும் காயம் இல்லை என கூறப்படுகிறது. 24 மணி நேரத்தில் மூன்றாவது தாக்குதல் அங்கு நடைபெற்றுள்ளது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக, பிரான்சில் நேற்று மீண்டும் துப்பாக்கிச்சூடு நடைபெற்றதாக கூறப்பட்டது. பாரீஸ் நகர் அருகே உள்ள மாண்ட்ரூஜ் நகரத்தில் நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிசசூட்டில் பொலிசார் ஒருவரும் நகரை சேர்ந்த தொழிலாளி ஒருவர் என இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய மர்ம நபர் குண்டு துளைக்காத உடை அணிந்து இருந்ததாகவும் தானியங்கி துப்பாக்கி மூலம் தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகிறது. இந்த துப்பாக்கிச்சூட்டால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்ட நிலையில், மீண்டும் அங்கு குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது.

பிரான்சில் உள்ள லியோன் என்ற நகரத்தில் உள்ள உணவகத்தில் குண்டு வெடித்துள்ளது. இந்த குண்டு வெடிப்பில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என தகவல்கள் கூறுகின்றன. அடுத்தடுத்த சம்பவங்களால் பிரான்சில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவசர ஆலோசனை நடத்த உயர் அதிகாரிகளுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பிரான்ஸ் தலைநகரின் மைய பகுதியில் உள்ள பத்திரிகை அலுவலகம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் காலை நடத்தப்பட்ட தாக்குதலில், 12 பேர் பலியானார்கள்.

மேலும், 10 பேர் காயம் அடைந்தனர். இந்த தாக்குதல், பிரான்ஸ் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. தற்போது மீண்டும் இது போன்ற சம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெறுவதால் பிரான்சில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. மேற்படி தீவிரவாதத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று சரணடைந்த 18 வயது இளைஞர் ஒருவரை, பிரான்ஸ் பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

AROD CARE AND REPAIR
வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

புதிய கட்டட நிர்மாண வேலைக்கான கூலி கூறுவிலை கோரல்


47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, வடக்கில் உள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க புதிய கட்டட நிர்மாணத்திற்கான கூறுவிலை கோரப்படுகிறது. எமது நிறுவனத்தில் காலை 9.00 மணிக்கும் பி.ப 5.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500/= ஐச் செலுத்திப் படிவத்தைப் பெற்று நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ 23.01.2015 முன்னர் அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு : 021 32 17718

வைத்திய கலாநிதி என். சிவராஜா
தலைவர்- AROD (சி-9760)

LED
Buy same item 10pcs Get 10% Discount
6 Months Warranty
SPECIAL PRICE FOR WHOLESALE BUYERS
Rs120/=
LED Display Board - 6"x 36" Rs.8500=
SLIM Panel Light
3w Rs.390/= | 6w Rs.690/=
12w Rs.990/= 18w Rs.1250/=
PLASTIC LED BULB
3W Rs.120/= | 5W Rs.210/=
7W Rs.260/= | 9W Rs.360/=
12W Rs.420/= | 15W Rs.550/=
18W Rs.750/=
LED Fexible Strip Light 5metre Rs.1550/=
LED Rotating Bulb Rs.290/=
LED Aluminum Bulb
3W Rs.230/=
5W Rs.330/=
7W Rs.430/=
9W Rs.630/=
Surface Mounted LED Panel light
3W Rs.690/= | 6W Rs.890/=
12W Rs.1390/= | 18W Rs.1590/=
KINGS ELECTRONICS
TV STAND Rs.7500/=
Size 14-32 Rs.650/=
No 11A, Stanley Road, Jaffna
Tel : 0212223857 Hotline : 0727949242 www.kingselectronics.lk

# சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 20 06 1948

மறைவு 10 12 2014

10.12.2014 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்ப குலவிளக்கு

**அமரர் சுந்தரலிங்கம் இராஜேஸ்வரி**

(வல்வை நெசவுசாலையில் பணிபுரிந்தவரும், சமூக அபிவிருத்தி மன்றத் தலைவியும் ஆவார்)

**அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று 09.01.2015 நண்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

குறிப்பு:-அன்னார் நோயுற்று இருந்த காலத்தில் அவரை அன்போடு அரவணைத்து வைத்திய உதவிகள் புரிந்த யாழ். போதனா வைத்தியசாலையினருக்கும் மற்றும் மரணச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்தவர்கள், மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
T.P-077 931 9434 (909)

கணவர், மகள்மார்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 92 சூரிசெவ் 1 இல்
உயரம்: 167cm
தகைமை/தொழில்:O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/3832

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 93 சூரி செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: MSc (லண்டன்)
தொ.இ: B/3833

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 44 செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில் (கனடா NOT PR)
தொ.இ: B/3836

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 25 உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
தொ.இ: B/3838

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 39.25 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில் A/L/ தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் விரும்பத்தக்கது
தொ.இ: G/3854

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 62
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/3856

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 31.5 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc/ ஆசிரியர்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் விரும்பத்தக்கது
தொ.இ: G/3858

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 42 உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L, CIMA/ சொந்த தொழில்
தொ.இ: G/3867

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)


இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

காய்ச்சி இணைப்பாளர் கற்கை நெறி (Welding) கைதடியில் நடைபெற்று வருகின்றது. இக்கற்கைநெறி தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சியாகும்.




இதேவேளை வெளியிணைப்பு இயந்திர திருத்துநர் (Out Board Motor Mechanic) இக்கற்கை நெறி ஊர்காவற்றுறையில் நடைபெற்று வருகின்றது.

இக்கற்கைநெறிகள் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம் ,இல.12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.சி (0212227949) எதிர்வரும் 15.01.2015 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதி கார சபையின் யாழ். உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ



# மகிந்தவினால் மட்டுமே மக்களின் பிரச்சினைகளினை இலகுவாகவும் விரைவாகவும் தீர்த்து வைக்கமுடியும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தொடர்வதன் ஊடாகவே எமது மக்களுக்கான வாழ்வாதாரத்தையும் அரசியல் ரீதியான பிரச்சினைகளையும் இலகுவாகவும் விரைவாகவும் தீர்க்க முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்திற்கு நேற்று சென்று வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் பல்வேறு இடங்களுக்கும் சென்று பார்வையிட்டதன் பிரகாரம் மக்கள் மிகுந்த அக்கறையுடனும் ஆர்வத்துடனும் வாக்களித்து வருகின்றனர். வாக்களிப்பு 60 வீதத்தைத்தையாவது தாண்டும் என நான் நம்புகின்றேன்.

பெரும்பான்மையான மக்கள் சரியான சின்னத்திற்கு வாக்களித்து வெற்றி வாய்ப்பை எனக்கு தருவார்கள் என்று நம்புகின்றேன்.

எனது தேர்தல் பிரசாரம் வெற்றிலைச் சின்னத்தை நோக்கித் தான் இருந்தது என்பதுடன் ஜனாதிபதி மகந்த ராஜபக்ஷதான் மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதுடன் அதிகாரத்தையும் தொடர வேண்டும்.

அவ்வாறு தொடர்வதன் ஊடாகவே எமது மக்களுக்கான வாழ்வாதாரத்தை மட்டுமன்றி அரசியல் ரீதியான பிரச்சினைகளையும் இலகுவாகவும் விரைவாகவும் மகிந்த ராஜபக்ஷ தீர்த்து வைப்பார் என்றும் நம்புகின்றேன்.

அத்துடன் எனது நிலைப்பாடு தெளிவானதும் உறுதியானதும் என்பதுடன் அதில் எந்த மாற்றமும் இல்லையென்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-5)

# காலாவதியான பொருட்களை விற்ற வர்த்தர்களுக்கு அபராதம் விதிப்பு

காலாவதியான பொருட்களை விற்ற 2 வர்த்தகர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் கடந்த செவ்வாய்க் கிழமை உத்தரவிட்டதாக யாழ். பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை பொறுப்பதிகாரி த.வசந்த சேகரம், நேற்று முன்தினம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் உரும்பிராய் ஆகிய பகுதிகளில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில், ஷம்போ மற்றும் மென்பானம் என்பவற்றை காலாவதியான திகதிகளுடன் விற்பனை செய்த குற்றத்தின் பேரில் 2 வர்த்தகர்கள் கைதுசெய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு, கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வர்த்தகர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டனர். இதனையடுத்து நீதவான் இந்த அபராதத்தை விதித்து தீர்ப்பளித்துள்ளார். (இ-5)

# மணல் கொள்ளையினை தடுத்தவர்மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வல்லிபுரம் ஆலயத்துக்கு அருகில் "திலுந்தின்" என்னும் கிராமத்தில் இடம்பெற்ற மணல் கொள்ளையை தடுத்தவர் மீது நால்வர் கொண்ட கும்பல் நேற்று வியாழக்கிழமை தாக்குதல் மேற் கொண்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்களை அப்பகுதி வாசியொருவர் தடுத்து நிறுத்தியுள்ளார். தடுத்து நிறுத்திய வரின் வீட்டுக்கு நேற்றுக் காலையில் சென்ற நால்வர் கொண்ட கும்பல், "மணல் அகழ்வை தடுப்பியா" எனக் கேட்டு கைகளால் சரமா ரியாகத் தாக்குதல் மேற்கொண் டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளானவர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற் கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# எமது வார்த்தைக்கு மதிப்பளித்து தமிழ் மக்கள் வாக்களித்தனர்

## மாவை எம்.பி.தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொண்டதற்கு இணங்க தமிழ் மக்கள் ஆர்வத்துடன் நேற்று வியாழக்கிழமை காலை முதல் வாக்களித்தனர் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கொல்லன் கலட்டி தமிழ் கலவன் பாடசாலையில் தனது மனைவியுடன் சென்று வாக்களித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மாவை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களை பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்குமாறு கோரியிருந்தோம். அதற்கமைய மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்து வருகின்றனர்.

இரண்டு மூன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று பார்த்தேன். அங்கு அதிகமான மக்கள் வாக்களிப்பதற்காக சென்று வருகின்றனர்.

பொது எதிரணி வேட்பாளர் வெற்றி பெறுவது நிச்சயம் என அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்து கூறுகையில், இது ஜனநாயகத்துக்கான ஜனாதிபதி தேர்தல் இல்லை.

எங்கள் வாக்குகளை வேறு ஒருவர் பயன்படுத்தக்கூடாது என்ற வகையில் நாங்கள் வாக்களித்து வருகின்றோம். ஆட்சி மாறினால் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் என உறுதியாக சொல்ல முடியாது. பொது எதிரணி ஜனநாயகத்தை நாட்டில் நிலைநாட்டவுள்ளதாக கூறுகின்றது. அது தெற்கில் மட்டுமா அல்லது வடக்கிலும் நிலை நிறுத்தப்படுமா என்பது கேள்விக குறியாகவுள்ளது எனத்தெரிவித்தார். (இ-5)

# காணி சுவீகரிப்பு தொடர்பில் கடிதங்கள் அனுப்பி வைப்பு

யாழ். மாவட்டத்தின், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/133 கிராம அலுவலர் பிரிவை (சூழாவடி) சேர்ந்த 5 பேரின் 0.3492 ஹெக்டேயர் காணிகள், ஸ்ரீலங்கா இராணுவத்தின் 11 ஆவ்து சிங்க ரெஜிமென் "பி" அணிக்கான நிலையத்தை அமைப்பதற்காக சுவீகரிக்கப்படவுள்ளதாக காணி உரிமை யாளர்களுக்கு கடிதம் அனுப்பபபட்டுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரால் அனுப்பப்பட்டுள்ள இந்த கடிதத்தில், எதிர்வரும் 21 ஆம் திகதி காணிகள் சுவீகரிக்கப்பட்டு, இராணுவத் தேவைக்காக எடுக்க ப்படவுள்ளதாகவும் அச்சமயம் காணி உரிமையாளர்கள் வருகை தந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் கூறப்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட கடிதம் காணி உரிமையாளர்களுக்கு நேற்று முன்தினம் கிடைத்தது. மரியாம்பிள்ளை சிங்கராசா, சுப்பிரமணியம் தம்பித்துரை, யேசுராசா விக்ரோறியா, இராயப்பு யேக்கப்பு, அம்பலவாணர் சிறி ஆகியோரது காணிகளே சுவீகரிக்கப்படவுள்ளன. இந்த கடிதத்தின் பிரதி யாழ்.மாவட்டச் செயலக காணி சுவீகரிப்பு அதிகாரிக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளை நில அளவை செய்வதற்காக கடந்த 2014 ஜூலை மாதம் 17 ஆம் திகதி நில அளவையாளர்கள் முயன்றபோது, காணி உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து காணி அளவிடும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது. (இ-5)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், துன்னாலை வடக்கு பகுதியிலுள்ள வயல் கிணற்றிலிருந்து ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். அதேயிடத்தை சேர்ந்த சின்னத்துரை பகவதி (வயது 85) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# கவிநயம்-2015 இந்துக்கல்லூரியில்

இளைஞர் இலக்கியமன்றம் பெருமையுடன் வழங்கும் "கவிநயம் 2015" மற்றும் "அக்கினிக் குஞ்சு" சிற்றிதழ் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

இந நிகழ்வு எதிர்வரும் ஞாயிறுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இளைஞர் இலக்கியமன்றத்தின் தலைவர் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ தலைமையில் இடம்பெறும் நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலரும், யாழ் கம்பன் கழக பெருந்தலைவருமான கவிஞர் த.ஜெயசீலன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக கே.யு நிறுவன இயக்குநர் கவிஞர் மணி மாறன் கலந்து கொள்வார்.

இறைவணக்கத்தை ஜெ.மதூசிகன் வழங்க, வரவேற்புரையினை ப.கதிர்தர்ஷினி வழங்குவார்.

வாழ்த்துரையினை யாழ்.பல கலைக் கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா ஆற்றுவார்.

தொடர்ந்து "அக்கினிக் குஞ்சு" சிற்றிதழ் வெளியீடு இடம்பெறும்.

தொடர்ந்து பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினரது உரைகள் இடம்பெறும்.கவிதையை வானதி செங்கதிர்செல்வன் வழங்க, கவி உரையினை ஜீவா ஷஜீவன் வழங்குவார்.

தொடர்ந்து பேராளர் கௌரவிப்பும், இளைஞர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இளையோர்களின் இந நல்ல முயறசியில் கைகோர்த்து ஆதரவு வழங்குமாறு இளைஞர் இலக்கிய மன்றத்தினர் கேட்டுள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# குர்திஷ் படையினருடன் மோதல் 24 ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் பலி

சிரியாவில் குர்திஷ் படையினருடன் நேற்று நடந்த மோதலில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் 24 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சிரியா, ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்கள், கடந்த செப்டெம்பர் மாதம் சிரியாவின் வடக்கு பகுதியில் தொடர் தாக்குதல் நடத்தி, முன்னேறினர். அங்கு துருக்கி எல்லைப் பகுதியில் அமைந்துள்ள 350 கிராமங்களை கைப்பற்றினர்.



அடுத்த கட்டமாக அவர்கள் எலலை நகரமான கொபானி என்று அழைக்கப்படுகிற அய்ன் அல் அரப் நகரின் மீதும் தாக்குதல்களை தொடங்கினர். இதனால் அந்த பகுதியில் வாழ்ந்து வந்த பல்லாயிரக்கணக்கான குர்து இன மக்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் நோக்கத்தில் அண்டை நாடான துருக்கியில் குடும்பம், குடும்பமாக போய் அடைக்கலம் தேடினர்.

## 24 பேர் பலி

தொடர்ந்து 4 மாதங்களாக அங்கு சண்டை நடந்து வருகிறது.

இந்த நிலையில், கொபானி நகரின் கிழக்கு பகுதிகளில் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கும், குர்து படையான மக்கள் பாதுகாப்பு பிரிவினருக்கும் இடையே நேற்று முனதினம்பயங்கர துப்பாக்கிச்சணடை நடந்தது.

இந்தச் சண்டையில் 24 ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என சிரியாவில் மனித உரிமைகளை கண்காணித்து வரும் அமைப்பு கூறியுள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்,

கொபானி நகரில் 80 சதவீத பகுதிகளை குர்து இனத்தவர் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து விட்டனர். கடந்த செப்டெம்பர் மத்தியில் இந்த நகரை முற்றுகையிடத் தொடங்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இப்போது கிட்டத்தட்ட நகரை விட்டு முழுமையாக ஓட்டம் பிடித்து விட்டனர். அமெரிக்காவின் வான்வழி தாக்குதல் உதவியுடன் குர்து படை வீரர்கள் கொபானி நகரை கொஞ்சம், கொஞ்சமாக தங்கள் வசப்படுத்தி விட்டனர்.


தற்போது அங்கு ஐ.எஸ்.ஐ.எஸ் தவிர வாதிகளுக்கும், குர்து படையினருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டை, மோதல்களில் 24 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல்களின்போது, குர்து படையினர் 7 பேரும் கொல்லப்பட்டனர். அத்துடன் அப்பாவி பொதுமக்கள் 2 பேரும் உயிரிழந்தனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

# இந்தியாவில் ஏராளமான வாய்ப்புக்கள் பயன்படுத்துமாறு பிரதமர் அழைப்பு

இந்தியாவில் உங்களுக்காக ஏராளமான வாய்ப்புகள் காத்திருக்கின்றன. நீங்கள் அவற்றை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று குஜராத்தில் நடைபெற்ற வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.



மகாத்மா காந்தி தென் ஆபிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பிய நூற்றாண்டு விழாவை ஒட்டி குஜராத் மாநிலம் காந்திநகரில் 13 ஆவது வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான மாநாடு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த மாநாட்டை தொடக்கி வைத்து பிரதமர் மோடி உரையாற்றிய போது,

இந்தியாவில் உங்களுக்காக ஏராளமான வாய்ப்புகள் காத்திருக்கின்றன. உலக நாடுகள் அனைத்தும் இந்தியாவை பெரிய எதிர்பார்ப்புடன் உற்று நோக்கி வருகின்றன. அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய நமக்கு தேவைப்படுவது நம்பிக்கை.

வெளிநாட்டில் வசிக்கும் ஒவ்வொரு இந்தியரையும் இந்நாட்டின் மூலதனமாகவே நான் கருதுகிறேன். இந்தியாவில் வியத்தகு மாற்றத்தை கொண்டுவர உங்களால் முடியும். வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு சிறந்த முதலீட்டு வாய்ப்பாக இந்தியா உள்ளது.

இந்தியாவில் முதலீடு செய்யும் அனைவருக்கும் ஒரே விதமான சலுகைகள் நிச்சயமாகக் கிடைக்கும். முதலீடுகளில் மட்டுமே அரசு கவனம் செலுத்தவில்லை. நீங்கள் உங்கள் தாய்நாட்டிற்காக எத்தகைய சேவையையும் நல்கலாம்.

2001 இல் குஜராத்தை உலுக்கிய பூகம்பத்தையடுத்து ஆபிரிக்காவில் வசித்த இந்திய வம்சாவளிப் பெண் ஒருவர் கட்ச் மாவட்டத்தில் பல மாதங்கள் தங்கியிருந்து சேவை செய்ததை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

ஒரு காலத்தில் நீங்கள் வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாட்டிற்குச் சென்றிருக்கலாம். ஆனால் இப்போது இந்தியா வலுவடைந்துவிட்டது. இந்தியாவில் உங்களுக்காக ஏராளமான வாய்ப்புகள் காத்திருக்கின்றன. நீங்கள் அவற்றை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுததாரிகளின் அராஜகத்தை எதிர்த்து அலையெனத் திரண்ட பாரீஸ் நகர மக்கள்









*பிரான்ஸ் நாட்டின் தலைநகரில் இருந்து வெளிவரும் நகைச்சுவை இதழான சார்லி ஹெப்டோவின் அலுவலகம் மீது தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் நடத்தியதுப்பாக்கி தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 10 பேர் படுகாயமடைந்தனர். நேற்று முன்தினம்காலை நடைபெற்ற இந்தத் தாக்குதலில் முகமூடியணிந்த மூன்று ஆயததாரிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த தாக்குதலில் ஈடுபட்ட ஒருதீவிரவாதி பொலிஸில் சரணடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட மூவரில் இருவர் சகோதரர்கள் என்றும் அவர்கள் பாரீஸை சேர்ந்தவர்கள் என்றும் விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது. இந்த கொடூர படுகொலையைக் கண்டித்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பாரீஸ் நகரில் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கில் அலையெனத் திரண்டுவந்த பாரீஸ் நகர மக்கள் தமது கண்டனத்தை வெளியிட்டு வருகின்றனர். அத்துடன் சம்பவத்தில் பலியான மற்றும் காயமடைந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் கையில் தீபத்துடன் பவனியாக ஊர்வலம் சென்றனர்.*

# பாரீஸ் பத்திரிகை தாக்குதல் 18 வயது இளைஞர் கைது



பாரீஸில் உள்ள சார்லி ஹெப்டோ வார இதழ் அலுவலகத்தில் 12 பேரை பலிகொண்ட தீவிரவாதத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று சரணடைந்த 18 வயது இளைஞர் ஒருவரை, பிரான்ஸ் பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

பிரான்ஸ் பொலிஸாரிடம் சரண டைந்துள்ள இளைஞரது பெயர் ஹமித் மொராத் என்று தெரிய வந்துள்ளது. மேலும், அந்த இளை ஞர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது போன்ற விபரங்கள் வெளி யாகவில்லை.

சரணடைந்துள்ள இளைஞர், மற்ற இருவரை தப்பித்து செல்ல உதவி செய்திருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாரீஸில் உள்ள சார்லி ஹெப்டோ என்ற வார பத்திரிகை அலுவலகத்தினுள் நேற்று முன்தி னம் புதன் கிழமை புகுந்த முகமூடி அணிந்த 3 நபர்கள் அந்த அலுவலகத்தின் ஒவ்வொரு பகுதியாக சென்று கண் மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர். இதில் பத்திரி கையின் ஆசிரியர், 4 கேலிச்சித்திர ஓவியர் உட்பட 12 பேர் பலியாகினர். மேலும் 10 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சார்லி ஹெப்டோ அலுவலகத்தினுள் 3 முகமூடி அணிந்த நபர்கள் நடத்திய தாக்குதல் காட்சி அங்கு வெளியே பொருத்தப்பட்டிருந்த கமராவில் பதிவாகியுள்ளது. இதில், தாக்குதல் நடத்திய 3 பேர்களில்



இருவர் மட்டும் அலுவலகத்தின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த காரில் ஏறி அருகே இருந்தவர்களை மோதியபடி துப்பாக்கிச் சூடு நடத் தியவாறு "அல்லாஹு அக்பர்" என்று முழக்க மிட்டு செல்வது பதிவாகியுள்ளது.

தாக்குதல் சம்பவம் நடந்த செய்திகள் வெளியான பல மணி நேரங்களுக்கு பின்னர், தாக்குதலில் ஈடுபட்டதாக கருதப்படும் இளைஞர், பாரீஸ் நகரின் பெல்ஜியம் எல்லை அருகே உள்ள பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமீபத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாத இயக்கத் தலைவன் அபுபக்கர் அல் பக்தாதியை கிண்டல் செய்யும் வகையில் இந்த பத்திரிகையில் கார்ட்டூன் வெளியாகி இருந்தது. இதற்கு பழி வாங்கும் வகையில் இத்தாக்குதல் நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

2011 ஆம் ஆண்டு முகமது நபியைப் பற்றிய ஒரு கட்டுரையை வெளியிட்டதாக இதே பத்திரிகை அலுவலகத்தின் மீது வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து பாரீஸ் நகரம் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். நகரில் அனைத்து பகுதிகளிலும் தீவிரவாதிகளை தேடும் பணி நடைபெற்று வருகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருசில ஊடகங்களின் செயற்பாடுகள் வெட்கப்படும் வகையில் அமைந்துள்ளன

## தேர்தல் ஆணையாளர் ஆதங்கம்

சில ஊடகங்களின் செயற்பாடுகள் வெட்கப்படும் வகையில் அமைந்துள்ளது என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இதன் காரணமாக மூன்று தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் ஓர் வானொலி சேவைக்கு எச்சரிக்கை கடிதங்களை அனுப்ப நேரிட்டது. தேர்தல் காலத்தில் ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து கண்காணித்து கட்டுப்படுத்த விசேட குழுவொன்று அமைப்பது குறித்து யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் ஊடகங்களின் செயற்பாடுகளை கண்காணித்து கட்டுப்படுத்த இந்தியா, நேபாளம் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் ஊடக ஆணைக்குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரத்தை முழு அளவில் உறுதி செய்ய வேண்டியது அவசியமானது. நாட்டின் தலைவரைத் தெரியும் ஜனாதிபதி தேர்தலின் போது, தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டால் ஊடக மற்றும் மொழிச் சுதந்திரத்தில் எவ்வித பயனும் கிடையாது. எச்சரிக்கை விடுக்கப்பட்ட ஊடக நிறுவனங்களுக்கு தேர்தல்முடிவுகளை உடனுக்குடன்வழங்குவதா அல்லது தாமதமாகி வழங்குவதா என்பதனைக் கூட தீர்மானிக்க வேண்டியுள்ளது குறித்த ஊடக நிறுவனங்கள் எதிர்காலத்தில் தமது பிழைகளைத் திருத்திக் கொண்டு செயற்படும் என எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஐந்து இலங்கையர்களுக்கு இந்தியாவில் 2 வருட சிறை


ஐந்து இலங்கையர்களுக்கு இந்திய நீதிமன்றத்தால் இரண்டாண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பெண்கள் உள்ளிட்ட ஐந்து இலங்கையர்கள் ஐந்து பிள்ளைகளுடன் இந்தியாவிற்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் பிரவேசித்து அகதி அந்தஸ்து கோரியதாக குறித்த இலங்கையர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு மே மாதம் தனுஸ்கோடி பிரதேசத்திற்கு படகு மூலம் இவ ர்கள் பிரவேசித்துள்ளனர்.

இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கு தலா ஒரு ஆண்டு வீதம் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தனுஸ்கோடி மாவட்ட நீதவான் சரவணகுமா ரினால் நேற்று முன்தினம் இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த இலங்கையர்கள் கடவுச் சீட்டு சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்கப்பட்டுள்ளனர். தண்டனை விதிக்கப்பட்ட போது குறித்த இலங்கையர்கள் தங்களது பிள்ளைகளுடன் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

பத்து வயதுக்கும் குறைந்த இரண்டு பிள்ளைகள் தங்களது தாய்மாருடன் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தெரிவித்து இவர்கள் இந்தியாவில அகதி அந்தஸ்து கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாரிய மரத்தை வீதிக்கு குறுக்காக வெட்டி வீழ்த்தி இடையூறு



புத்தளம்-அநுராதபுரம் வீதியில் நேற்றுக்காலை பாரியமர மொன்றை வெட்டி வீதிக்கு குறுக்காக வீழ்த்தியமையால் அவ்வீதியால் பயணிக்க வேண் டியவர்கள் சுமார் ஒன்றரை மணி நேரமாக காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதாக தேர்தல்கள கண்காணிப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், விரைந்து செயற்பட்ட பொலிஸார் அந்த மரத்தை அங்கிருந்து அகற்றி, அவ்வீதியினுடனான போக்குவரத்தை சீர் செய்துள்ளனர். புத்தளத்திலிருந்து மன்னாருக்கு வாக்களிப்பதற்கு செல்லும் வாக்காளர்களை தடுக்கும் நோக்கிலேயே இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்கத்துடன் தொடர்புடைய குழுவி னரே இந்த மரத்தை வெட்டி வீழ்த்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 170 | 140 |
| உருளைக்கிழங்கு | 90 | 65-75 | 80 |
| பச்சைமிளகாய் | 450 | 400-450 | 500 |
| தக்காளி | 150 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40-45 | 50 |
| கோவா | 120 | 80-110 | 140 |
| கரட் | 180 | 140 | 240 |
| பூசணி | 40 | 35-40 | 60 |
| புடோல் | 140 | 100 | 140 |
| வாழைக்காய் | 90 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 110 | 50-90 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 750 | 100 |
| பாகற்காய் | 300 | 350-400 | 400 |
| வெண்டிக்காய் | 180 | 130-140 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 55-60 | 80 |
| பயற்றங்காய் | 240 | 180-200 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 200 | - | 240 |
| கறிமிளகாய் | 400 | - | 280 |
| முருங்கைக்காய் | - | - | - |
| போஞ்சி | 350 | - | 240 |
| கத்தரிதம்புள்ள | 140 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 30 | 15 | 40 |
| தேசிக்காய் | 100 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45-50 | 40-50 |
| இராசவள்ளி | 140 | 120-130 | 140 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 246


தசா ஜெயா





சீர்த்து கரன்





சக்தி வேல்




சியா சியாமினி




நிரு நிருஷா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆலைத் தொழிலாளியும் பூனை உலகமும்



...அடுத்தநாள் காலையில், இதேபோல் பூனைகள் அவனுக்கு சேவகம் செய்தன.

இப்போது ஹன்ஸ் பூனைக்காக வேலை பார்க்க வேண்டிய நேரம்.

தினமும் விறகு வெட்டி வரவேண்டியது அவனுடைய வேலை.

இந்த வேலைக்காக அவனுக்கு வெள்ளிக் கோடரி, ரம்பம், உளி, தாமிரத் தால் ஆன சுத்தியல் ஆகியவற் றைக் கொடுத்தது பூனை.

அவனும் மரத்தை வெட்டி எடுத்து வந்தான்.

கோட்டையில் ஓய்வெடுக்கும் நேரம் இருந்தது.

ஆனால், அந்தக் கோட்டையில் பூனைகளைத் தவிர வேறு யாரும் இல்லை.

ஒரு நாள் அவனைக் கூப்பிட்ட பூனை, போய் என் புல்வெளியை அறுத்து, வைக்கோல் தயார்செய் என்றது.

வெள்ளியாலான அரிவாள், தங்கத்தாலான கத்தி ஆகியவற்றை அவனிடம் கொடுத்து, வேலை முடிந்ததும் எல்லாவற்றையும் பத்திரமாகத் திரும்பிக் கொடுக்க வேண்டும் என்றது.

ஹன்ஸ் வைக்கோலை அறுத்த பிறகு, பூனை கூறியபடியே எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்தான்.

இப்போதாவது தன் உழைப்புக்கு ஊதியம் கிடைக்குமா? என்று கேட்டான்.

இல்லை!

இங்கே வெள்ளி மரம், கோடரி என உனக்குத் தேவைப்படும் எல்லாமே வெள்ளியில் இருக்கின்றன.

எனக்காகச் சிறிய வீடு ஒன்றைக் கட்டித்தர வேண்டும் என்றது.

ஹன்ஸ் வீட்டைக் கட்டினான்.

முடித்த பிறகு, பூனையிடம் சென்று விடயத்தைச் சொன்னான்.

ஏழு வருட ங்கள் அவன் அங்கே வேலை பார்த்திருந்தாலும் அது, ஆறு மாதத்தைப் போலத்தான் தோன்றியது.

இப்போது குதிரைகளைப் பார்க்கலாம் எனக் கூறி அழைத்துச் சென்றது பூனை.

அங்கே 12 அற்புதமான குதிரைகள் இருந்தன.

அவற்றின் மீது இருந்த துணி கள் தகதகவென மின்னின.

ஹன்ஸின் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது.

நீ வீடு திரும்பும் நேரம் வந்து விட்டது.

ஆனால் இப்போது குதிரையைக் கொடுக்க மாட் டேன்.

மூன்று நாட்களில் நானே உன்னைத் தேடி வருகிறேன் என்றது பூனை.

பிறகு, வெளியில் வந்து ஆலைக்கு வழி காட்டியது. ஷ

ஹன்ஸ் ஆலைக்குச் சென்றான்.

பூனை அவனு க்கு புதிய உடைகள் ஏதும் கொடுக்கவில்லை என்பதால் பல ஆண்டுகளாக அவன் ஒரே ஆடையைத்தான் அணிந்திருந்தான்.

அவை கிழிந்திருந்தன.



அவன் வீட்டை அடைந்த போது அவனது சகாக்கள் இருந்தனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடன் ஒரு குதிரையைக்கொண்டு வந்திருந்தனர்.

தொடரும்......




- 475 -பைசண்டைன் பேரரசன் சீனோ அவனது தலைநகரான கொன்ஸ்டண்டீனப்போல் நகரை விட்டுக் கட்டாயமாக வெளியேற்றப் பட்டான்.
- 1793 - ஜான் பியர் பிளன்சார், வாயுக்குண்டில் பறந்த முதல அமெரிக்கர் ஆனார்.
- 1799 - பிரித்தானியப் பிரதமர் வில்லியம் பிட், நெப்போலியனுக்கெதிரான போருக்கு நிதி சேர்ப்பதற்காக வருமான வரியை அறி முகப்படுத்தினார்.
- 1816 - ஹம்பிறி டேவி, சுரங்கத் தொழிலாளர்களுக் காக வடிவமைக்கப்பட்ட டேவி விளக்கை வெற்றிகரமாகப் பரிசோதனை செய்தார்.
- 1861 -அமெரிக்க உள்நாட்டுப் போர் தொடங்க முன்னர் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இரண்டாவது மாநிலமாக மிசிசிப்பி பிரிந்தது.
- 1878-இத்தாலியின் மன்னனாக முதலாம உம் பேர்ட்டோ, முடி சூடினான்.
- 1916 - முதலாம் உலகப் போர்: ஓட்டோமான்களின் வெற்றியுடன் கலிப்பொலி நடவடிக்கை முடிவுக்கு வந்தது.
- 1921 - புனித ஜார்ஜ் கோட்டையில் சென்னை சட்ட மன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.
- 1951-ஐநாவின் தலைமையகம் நியூயோர்க நகரில்அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.
- 1972 -ஹொங்கொங்கில் குயீன் எலிசபெத் கப்பல் தீக்கிரையானது.
- 1974 -யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு முடிவடைந்தது.
- 1990 -நாசாவின் கொலம்பியா விண்ணோடம், ஏவப்பட்டது.
- 2001 - சீனாவின் ஷென்சூ 2 விண்கலம், ஏவப்பட்டது.
- 2005-சூடான் அரசுக்கும் சூடான் மக்கள் விடுதலை இயக்கத்துக்குமிடையில் அமைதி ஒபபந்தம் கென்யாவில் கைச்சாத்திடப்பட்டது.

**பிறப்புகள்**

- 1868 - சோரென்சென், டென்மார்க் வேதியியலாளர் (இ. 1939)
- 1908-சிமோன் ட பொவார், பிரெஞ்சுப் பெண் எழுத்தாளர் (இ. 1986)
- 1913 -ரிச்சர்ட் நிக்சன், ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் (இ. 1994)
- 1922 - ஹார் கோவிந்த் கொரானா, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இந்தியர்
- 1927-துரைசாமி உருத்திரமூர்த்தி, ஈழத்துக் கவிஞர் (இ. 1971)
- 1959 -ரிகொபேர்ட்டா மென்சு, நோபல் பரிசு பெற்ற கௌதமாலா எழுத்தாளர்

**இறப்புகள்**

- 1873 - மூன்றாம் நெப்போலியன், பிரெஞ்சு மன்னன (பி. 1808)
- **1924 - சேர் பொன்னம்பலம் அருணாசலம், இலங்கையின் தேசியத் தலைவர் (பி. 1853)**
- 1961 - எமிலி பால்ச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1867)
- 1998 -கெனிச்சி ஃபுக்கி, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய வேதியியலாளர் (பி. 1918)

## பொன்னம்பலம் அருணாசலம்



பொன்னம்பலம் அருணாசலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள மானிப்பாயைச் சேர்ந்த கேட் முதலியார் என அழைக்கப்பட்ட பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் மூன்றாவது மகனாக 1853 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி பிறந்தார். குமாரசாமி முதலியார், சேர். பொன். இராமநாதன் ஆகியோர் இவரது சகோதரர்கள்.

அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பணியாற்றிய இவர் கண்டி காவல்துறை நீதிமன்றத்திலும் இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள நீதிமன்றங்களிலும் அலுவலராகப் பணிபுரிந்தார்.

குடிசன மதிப்பீட்டு முறையினை அறிமுகப்படுத்தினார். தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக 1915 ஜனவரி 29 ஆம் திகதி சமூகச் சேவை சங்கத்தினை உருவாக்கினார். 1915 ஆம் ஆண்டு சிங்கள, முஸ்லிம் கலவரத்தைத் தொடர்ந்து தேசிய இயக்க அரசியலிலும் தன்னை ஈடுபடுத்தினார்.

1919 ஜூன் 25 ஆம் திகதி இலங்கைத் தொழிலாளர் சேமாவிருத்திச் சங்கத்தை உருவாக்கினார். இச்சங்கம் 1920 இல இலங்கைத் தொழிலாளர் சம்மேளனமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1919 டிசம்பர் 11 இல் அருணாசலத்தின் முயற்சியினால் இல ங்கையின் முதலாவது தேசிய இயக்கமான இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. தமிழர்களை தேசிய காங்கிரசுடன் இணைப்பதற்கான பேச்சுவார்த்தையில் இவரே நடுவராகத் தொழிற்பட்டார். எழுத்து வடிவில் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத் திடப்பட்டது. 1921 ஆகஸ்டில் தமிழர் அடையாள அரசியலை நிலைநிறுத்தும் வகையில் தமிழர் மகாஜன சபையின்னை உருவாக்கினார்.

தமிழர் அடையாள அரசியலில் அருணாசலத்தின் ஆளுமையை முழுமையாகப் பெற முடியவில்லை. அதற்கு முன்னரே அவர் 1924 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி தனது 71 ஆவது வயதில் காலமானார்.

1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் திகதி அரசாங்க சபை மைதானத்தில (தற்போதைய ஜனாதிபதி செயலகம்) தேசாதிபதியால் அருணாசலத்தின் வெண்கலச்சிலை திறந்து வைக்கப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழக மண்டபம் ஒன்றிற்கு அருணாசலத்தின் பெயரும் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

...இப்படத்தில் 2 கதாநாயகர்கள். அதுவரை நல்லவராகவே நடித்து வந்த சிவகுமாரை கெட்டவராகவும் நடித்து வந்த ரஜினிகாந்தை நல்லவராகவும் நடிக்க வைக்கத் தீர்மானித்தோம்.

இது பற்றி அறிந்ததும் ரசிகர்கள் இந்த மாற்றத்தை ஏற்பார்களா?

என்று சிவகுமார் கொஞ்சம் தயங்கினார். ஆனால் பிறகு அதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு அந்த கதாபாத்திரத்தை ஏற்று மிகச் சிறப்பாக நடித்தார்.

புதிய கதாபாத்திரத்தை ஏற்று நடித்ததில் ரஜினிக்கு எக மகிழ்ச்சி அற்புதமாக நடித்து இந்த கதாபாத்திரமாகவே வாழ்ந்து காட்டினார்.

இந்தப் படம் வெளியாகும் வரை சிறந்த வில்லானாகவும் ஸ்டைல் மன்னனாகவும் மட்டுமே ரஜினியை ரசியர்கள் நினைத்தார்கள். அவர் எல்லாவித பாத்திரங்களையும் ஏற்று நடிக்கக்கூடியவர் என்பதை எடுத்துக் காட்டிய படம் புவனா ஒரு கேள்விக் குறி.

இப்படம் ரஜினியின் திரை உலக வாழ்க்கையில் பெரிய திருப்தை ஏற்படுத்தியது.

இவ்வாறு எஸ்.பி.முத்துராமன் கூறினார்.

புவனா ஒரு கேள்விக்குறியைத் தொடர்ந்து ரஜினி நடித்த சூப்பர் ஹிட் படம் 16 வயதினிலே இது பாரதிராஜா டைரக்ட் செய்த முதல் படம்.

புவனா ஒரு கேள்விக் குறி வெளிவந்து 2 வாரம் கழித்து வெளி வந்த இப்படம் ரஜினியின் புகழை மேலும் உயர்த்தியது.




"பரட்டை" ரஜினி "சப்பாணி" கமல். (படம் "16 வயதினிலே")

### "பரட்டை" வேடத்தில் முத்திரை பதித்தார், ரஜினி

இதில் கதா நாயகன் சப்பாணியாக கமல் ஹாசன் நடித்தார். அவர் அற்புதமாக நடித்த படங்களில் ஒன்று 16 வயதினிலே கதாநாயகியாக ஸ்ரீதேவி சிறப்பாக நடித்தார்.

**பரட்டை**

முழுக்க முழுக்க மண்வாசனை கமழ்ந்த இப்படத்தில் பரட்டை என்ற முக்கிய வேடத்தில் ரஜினி நடித்தார். படத்தின் கதை புதுமையானது. படத்தின் கதாநாயகி ஸ்ரீதேவி அவருடைய தாயார் காந்திமதி.

சதா வெற்றிலையை குதப்பிக் கொண்டு கோணிக் கோணி நடக்கும் சப்பாணி கமல்ஹாசன் ஆத்தா ஆத்தா என்று காந்திமதியிடம் மிகுந்த விசுவாசம் வைத்திருந்தார்.

அந்த ஊருக்கு வரும் டாக்டரை (சத்யஜித்) ஸ்ரீதேவி காதலிப்பார். டாக்டர் தன்னைக் காதலிப்பதாக ஸ்ரீதேவி நினைப்பார்.

ஆனால் நான் விரும்புவது உன்னுடைய 16 வயதைத்தான் உன்னை அல்ல என்று கூறிவிட்டு வேறு பெண்ணை டாக்டர் கல்யாணம் செய்து கொள்வார்.நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு பரட்டை அடிப்பது பெண்களை கேலி செய் வது ஆகியவற்றையே தொழிலாகக் கொண்ட பரட்டைக்கு (ரஜினி) ஸ்ரீதேவி மீது ஒரு கண்.

ஒரு நாள் ஸ்ரீதேவியை அவர கெடுக்க முயற்சிக்கும் போது அங்கே வரும் கமல் ஒரு பெரிய பாறாங்கல்லைத் துக்கிப் போட்டு ரஜினியைக் கொன்று விடுவார்.


அதுவரை கமல் வெறுத்து வந்த ஸ்ரீதேவியின் மனம் அடியோடு மாறும். தன் கற்பைக் காப்பதற்காக கொலையாளியாக ஜெயிலுக்குப் போன கமல் எப்போது விடுதலையாகி வருவார் என்று எதிர் பார்த்து ரெயில் நிலையத்திர்ல் காத்திருப்பார்.

தமிழ் திரைப்பட வரலாற்றில் மிக முக்கிய இடத்தைப் பெற்ற படம் 16 வயதினிலே. ஒரு நிஜ கிராமத்தைகண் முன் கொண்டு வந்து நிறுத்திய படம். நடித்தவர்கள் எல்லோரும் உயிருள்ள பாத்திரங்களாக நடனமாடினார்கள். ரஜினி நடித்து வில்லக் காதபாத்திரம் என்றாலும் மிகச் சிறப்பாக நடித்திருந்தார். இது இப்படி இருக்கு? என்று கேட்டு அவர் பேசிய வசனங்கள் கை தட்டல் பெற்றன.

**நெருப்பு**

அஜந்தா கம்பைன்ஸ் தயாரித்த சகோதர சவால் என்ற கன்னடப் படத்தில் ரஜினி, கவிதா, பவானி, ஹாலம், ஜெயமாலினி, ஜெயபாரதி, பிரமிளா, விஷ்ணு, வர்த்தன் ஆகியோர் நடித்தனர்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 42

...வாங்கப்பா. வாங்க வாங்க.. குட்டிபோட்ட பூனமாதிரி அங்கிட்டும் இங்கிட்டும் ஓடிப் பரபரப்பாகிப் போனா பெரியமூக்கி.

ஒட்டுல மணலப் போட்டுக் கடல வறுத்துக் கிட்டிருந்த கருவாச்சிக்கு வந்தவுக யாரு எதுக்கு வந்திருக்காக ஒரு வெவரமும் தெரியல. மத்தியானத்திலருந்தே அவள நல்ல சீல கட்டச் சொன்னா ஆத்தா.

அவ முந்தானைய இவ மூஞ்சியில போட்டு அழுத்தி அழுத்தி எண்ணத் தொடச்சா கட்டச் சீப்பு வச்சுத் சீவி வாரிவிட்டா. போடி.. போயி பொட்டு வச்சுக்கன்னு தள்ளி விட்டா.

என்னைக்கும் இல்லாம இன்னக்கி ஆத்தா ஏன் இந்த அழிச்சாட்டியம் பண்றா? எரிச்சலாயிருந்துச்சு கருவாச்சிக்கு.

மிச்சரையும் அதிரசத்தையும் பிரிச்சு தனித் தனி ஏனம் சரியா வாய்காம ஒரே கும்பாவுல ரெண்டையும் போட்டுக் கொட்டி போடி போ சொந்தக் காரங்களுக்கு நீயே போய் குடுடீன்னு ஏவி விடுறா மகள.

அவுக அளுக்கொரு கை மிச்சர அள்ளி நாலு அதிரசம் ஏழு பேருக்கு வராதுங்கற கணக்குல ஆளுக்குப் பாதி கிள்ளி கருவாச்சிய வச்ச கண் வாங்காமப் பாக்குறாக.

பொண்ணுப் பாக்க வந்த எடத்துல கை கழுவக் கூடாதுங்கிற சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு துண்டு- வேட்டி- சீலையில தொடைச்சுக்கிறாக பலகாரம் தின்ட கைய.

கருவாச்சி பின்னாலயே போயி அவ முதுகுக்குப் பின்னால் ஒக்காந்த விட்டி தங்கச்சி மஞ்சப்பையிலயிருந்த மல்லிகப் பூவ எடுத்துக் கருவாச்சி தலையில வைக்கிறா. பூ வைக்கிற சாக்கில குடுமிய ஒரு இழு இழுக்கிறா.

யாத்தேன்னா கருவாச்சி. ஒட்டு முடி இல்ல.. நெச முடிதான்னு சந்தோசப்பட்டுக்கிட்டா விட்டி தங்கச்சி; ஊமையில பேச்சும் வருதுன்னு உ[illegible] ஒக்காந்த [illegible] தண்டி நெறம் ஒயரம் காதுல கெடந்த தண்டட்டி எல்லாத்தையும் எட போட்டவ அவ கழுத்துப் பாத்ததும் மளார்



ன்னு எந்திரிச்சுப் பதறிப் போயி ஓடி வந்தா.

[illegible] போய்க் காதுகடி[illegible]ணே தாலிகட்டி அலையிறவளையா பொண்ணு பாக்க வந்த?

அதுக்கென்ன தங்கச்சி. நான் என்ன புதுமாப்பிளையா..? இந்த வீட்டு மாடு கயிறோட நிக்கிது. நம்ம வீட்டுக்கு வாங்கிட்டுப் போறப்ப புடிபயிறு மாத் திட்டா போச்சு.

அப்பத்தான் தெரியுது கருவாச்சிக்கு இது ஆத்தா நடத்துற கூத்துன்னு.

தாழ்வாரத்த விட்டுத் திண்ணைக்கு விறு விறு விறுன்னு நடந்து வந்தா.

நீங்க எல்லாம் எதுக்கு வந்திருக்கீக?

பொண்ணு பாக்கதான் தாயி... ஒன்னிய.

பெரியவுகளா வந்திருக்கீகளே மாப்பள வரலையா? இவர்தான் மாப்ள.

எங்கழுத்துல தாலி இருக்கே. பரவாயில்லையா?

தெரிஞ்ச கதை தானே பரவாயில்ல. கழுத்துல தாலியிருந்தாப் பரவாயில் லேன்னு சொல்றீகளே வயித்துல பிள்ளையிருந்தாலும் பரவாயில்லைன்னு சொல்லுவீகளா?

வந்தவுகளுக்கு மூச்சுப் பேச்சு நின்னு போச்சு. அலறியடிச்சு எந்திரிச்சுப் பெரியமூக்கி கத்துறா?

என்னாடி சொல்ற குடிக் கெடுக்க வந்தவளே? தனிஞ்ச குரல்ல கருவாச்சி சொல்றா; ஆத்தா நான் முழுகாம இருக்கேன்.. மூணு மாசம்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# இரகசிய விலங்கியல்: இராட்சத பாம்பு

படம் -BOA



படம் Anaconda



பாம்பு என்றால் படையும் நடுங்கும். அனகோண்டா திரைப்படம் பார்த்து அந்தப் படத்தில் காட்டப்பட்ட பாம்பையும் அதன் குணங்களையும் பார்த்துப் பயந்தவர்கள் அதிகம். பாம்புகள் பொதுவாக ஒரு வித மிரட்சியை ஏற்படுத்தக் கூடியவை. பாம்புகள் பற்றிய மனிதனின் கண்ணோட்டத்தை மாற்ற பல முயற்சிகள் நடந்தாலும் இந்த விலங்குகள் இன்றும் மனிதனின் பயங்கரக் கனவாகவே உள்ளன. விஷம் கக்கும் பாம்புகள் பல வகை இருப்பினும் அதன் தோற்றத்தால் மனிதனை அதிகம் பயமுறுத்துபவை இராட்சதத் தோற்றம் கொண்ட பாம்புகளே.

பாம்புகள் உப வருணம் செர்பென்ட்ஸ் என்ற பாகுபாட்டு வகைக்குள் அடங்கும். இவை அநேகமாக ஊன் உண்ணிகள் ஆகும். இந்த ஊர்வன விலங்குகள் நியூசிலாந்து , கிரீன் லேண்ட், அன்டார்டிக்கா போன்ற ஒரு சில இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் எல்லாம் காணப்படுகினறன.

படம் PYTHON




பொதுவாக பெரிய வகைப் பாம்புகளாக மூன்று வகைகளைக் குறிப்பிடலாம்.

1. போவா (BOA)
2. பய்தொன (PYTHON)
3. அனகோண்டா (ANACONDA)

**போவா**

போவா என்றால் பெரிய பாம்பு (LARGE SERPENT) என்று அர்த்தம். இவை 30 அடி நீளமும் 280 பவுண்ட் எடை வரைக்கும் வளரக்கூடியவை. ஆபிரிக்கா, ஆசியா, மத்திய அமெரிக்கா, மடகஸ்கார் மற்றும் பசுபிக் தீவுகளில் ஈரலிப்பான புல் மற்றும் மரம் சார்ந்த இடங்களில் காணப்படும். 41 இனங்கள் இவற்றில் அறியப்பட்டுள்ளன.

படம -ஒரு கற்பனை



**பய்தொன்**

இவையும்போவாபோன்றவையே. 33 அடி நீளமும் 230 பவுண்ட் நிறையும் கொண்டவை. இவை ஆசியா, அவுஸ்திரேலியா, மடகஸ்கார் மற்றும் ஆபிரிக்காவில் காணப்படுகின்றன.

**அனகோண்டா**

நீர்போவாக்கள் (water boas) என்று அழைக்கப்படும் இவை மத்திய அமெரிக்க காடுகளில் வாழ்வன. மிகவும் பெரிய பாம்புகளான இவை 30 அடி நீளமும் 350 பவுண்ட் எடையும் கொண்டவை ஆகும். நான்கு இனங்கள் இவற்றில் காணப்படுகின்றன.

இந்த மூன்று வகைகளில் போவாவும் அனகொண்டாவும் போய்டே (boidae) எனற குடும்பத்திலும் பய்தொன் பய்தொனிடே (pythonidae) என்ற குடும்பத்திலும் அடங்கும். இவை யாவும் இரையை நெரித்து கொன்று விழுங்கும் வழக்கம் கொணடவை.

இவ்வாறு இன்று நாம் அறிந்த பெரிய பாம்புகள் பல வகை இருந்தாலும் இரகசிய விலங்கியல் ஆய் வாளர்கள் இன்னும் இராட்சத பாம்பு ஒன்று அல்லது பல வகைகள் அறியப்பாது உள்ளன என்று வாதிடுகிறார்கள். இவர்கள் சொல்லும் இந்தப்பாம்பு அனகோண்டாவை விட இரு மடங்கு நீளமானது. ஆம், இது 60 அடி அல்லது 100 அடி நீளம் கொண்ட எம் கற்பனைக்கு எட்டாத பாம்பு வகை ஆகும்.

படம்: இரையை நெரித்து கொன்று விழுங்கும்



தொடரும

க.கஜபதி
விரிவுரையாளர்,
விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 126

ஒலியை அளக்கும் அளவீடு என்ன? அதன் குறியீடு என்ன?

புதிர் 126 இற்கான விடைகளை 19.01.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 125இற்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

வி.அபிநயா,
9/48 தொங்கை மூலை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

**புதிர் 125க்கான கேள்வியும் விடையும்:**

GOD particle (kadavul thukal) என்பதன் அர்த்தம் என்ன?

இயற்கையான ஒ ளியால் தென் துருவ வானில் தெரியும் ஒருவகை வண்ணத் தோற்றம்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல.127

சரியான விடை:-..............................

முழுப்பெயர்:-..............................

முகவரி:-..............................

தொ.பே. இல:..............................

கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் வரத்தின்றி பல ஏக்கர் பயிர்கள்
# அழியும் நிலை



(குருமன்காடு)

தண்ணீர் வரத்தின்றி பல ஏக்கர் பயிர்கள் அழியும் நிலையில் உள்ளதாக தண்ணிமுறிப்பு விவசாயிகள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனிடம் முறையிட்டுள்ளனர்.

வாய்க்கால் வழியாக செல்லும் நீரை நம்பியிருக்கும் விவசாயிகள் அந்த நீர் குறித்த இடங்களை அடையாமல் இருப்பதாகவும் இதனால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்கள் நீரின்றி காணப்படுவதாகவும் தண்ணிமுறிப்பு விவசாயிகளும் மக்கள் பிரதிநிதிகளும் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

தண்ணிமுறிப்பு கமக்கார அமைப்பு தலைவர் சசிகுமார் மற்றும் குமுழமுனை கமக்கார அமைப்பின் உப செயலாளர் மயூரன் ஆகியோர் மேற்படி நிலையை ரவிகரனிடம் விளக்கியிருந்தனர்.

அதனைத்தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்த அவர்,அங்கு கூடியிருந்த விவசாயிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களின் முறைப்பாட்டைக் கேட்டறிந்தார்.

அதன் பின்னர் விவசாய அமைச்சருடனும், மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளருடனும் தொடர்புகொண்டு தண்ணிமுறிப்பு வாய்க்கால்களில் உள்ள குறைகளை எடுத்துக் கூறியதோடு அதற்கான நடவடிக்கைகளையும் காலதாமதமின்றி செயற்படுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

அந்தவகையில் அண்ணளவாக ஐம்பது வேலையாட்களை அனுப்பி ஓரிரு நாட்களில் இவ்விடர்பாட்டை சரிசெய்வதாகவும் மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் அவரிடம் உறுதியளித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ரவிகரன்,

இவ்வாறான பிரச்சினைக்கு மூலகாரணமாக தண்ணிமுறிப்பு குள புனரமைப்பில் வாய்க்கால்கள் கட்டப்பட்ட விதம் முறையற்றது என்பதையே தண்ணிமுறிப்பு விவசாயிகள் முன்வைக்கின்றனர்.

வாய்க்கால்கள் மிக ஒடுக்கமாகவும் உயரம் குறைவானதாகவும் அமைக்கப்பட்டிருப்பதன் காரணமாக பெரும்பாலான விவசாய நிலங்களை தண்ணிமுறிப்பு குளத்தின் நீர் அடையவில்லை என்பதும் அவர்களது முறைப்பாடாக உள்ளது.

குளத்தில் இருந்து தெற்கு வாய்க்காலில் 2 கிலோமீற்றர் தூரமே நீர் வரத்து காணப்படுகிறது. இன்னும் 7 கிலோமீற்றர் அளவிற்கு நீர் செல்லவேண்டி உள்ளது.

இதேபோல மத்திய வாய்க்கால் மூலமாகவும் இன்னும் ஏறத்தாழ 5 கிலோ மீற்றர் தூரமான விவசாய நிலங்களுக்கு நீர் செல்லவேண்டும். 12 ஆம் கட்டை வாய்க்காலில் ஒரு கிலோ மீற்றர் அளவே நீர்வரத்து உள்ள நிலையில் இன்னும் 8 கிலோ மீற்றர் அளவு தூரம் நீர் வரத்து இருக்கவேண்டும் என்பதையும் அறியக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் இவ் இடர்பாட்டிற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள விருப்பதாக உறுதியளித்திருக்கிறார்.

ஆண்டாண்டு காலம் நிறைந்த விளைச்சலை தந்துகொண்டிருக்கும் இந்த தண்ணிமுறிப்பு குளத்தை நம்பியிருக்கும் விளைநிலங்கள் தொடர்ந்தும் அதிக விளைச்சலை பெறவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (அ-2-250)




## அக்கராயன்-முழங்காவில் வீதியை புனரமையுங்கள்

கிளிநொச்சியில் இருந்து அக்கராயன் குளம் ஊடாக முழங்காவில் செல்லும் பிரதான வீதி மீள்குடியமர்வின் பின்னர் இதுவரை புனரமைப்பு செய்யப்படாததுடன் அண்மைக்காலமாகப் பெய்த பருவமழை காரணமாக மிகவும் சேதமடைந்து இவ் வீதியூடாக பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாக பயணிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி அக்கராயன்குளம் வீதியின் (சி-15) 9 கிலோமீற்றர் வரையான வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதி 15 கிலோமீற்றர் நீளமான பகுதி புனரமைப்பு செய்யப்படவில்லை.

இதனால் வீதியெங்கும் வெள்ளம் தேங்கி நிற்பதுடன் கனரக வாகனங்கள் பயணிக்கும் போது கிரவல் சேற்று நீரை பாடசாலை மாணவர்கள் மீதும், வீதியால் பயணிப்போர் மீதும் அடித்துச் செல்கின்றது.

இதனுடன் குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ் வீதியால், அவசர சிகிச்சைக்கான நோயாளர்களை கொண்டு செல்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, கிளிநொச்சி-கரைச்சி பிரதேசத்தில் அதிக மக்கள் செறிந்து வாழும் கோணாவில், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு, சோலை நகர், காந்திகிராமம், ஸ்கந்தபுரம், அக்கராயன் குளம், கண்ணகைபுரம், யூனியன்குளம் போன்ற பிரதேசங்களை சேர்ந்த 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் பிரதான போக்குவரத்து பாதையாகவும், ஆனைவிழுந்தான், வன்னேரி, ஜெயபுரம், கிராஞ்சி, வலைப்பாடு, சோலை, பல்லவராயன்கட்டு நாச்சிக்குடா, முழங்காவில் பிரதேசங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களதும் பிரதான போக்குவரத்து பாதை இது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வீதியை புனரமைப்பு செய்து தருமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கைகளை 5 வருடங்களாக முன்வைத்த போதும் எதுவிதமான புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை புனரமைப்பு செய்யப்பட்ட 9 கிலோமீற்றர்பகுதியும்சேதமடைந்துவருவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே பொது நல நோக்குடன் இவ்வீதிப் புனரமைப்பை மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-272)

## மருதநகர் கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்கவில்லை

### பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டு

(மருதநகர்)

கிளிநொச்சி-மருதநகர் கிராமத்தின் பல இடங்களுக்கும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நகருக்கு இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்குட்பட்டு அமைந்துள்ள விவசாயக்கிராமம் மருதநகராகும்.

இக் கிராத்திலுள்ள மக்களுக்கு இந்தியன் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையிலும், இன்றுவரை அவ்விடத்திற்கு மின்சார இணைப்பு வழங்கப்படாமையால் அல்லல் படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மருதநகர் வில்சன் வீதியில் அமைந்துள்ள குறுக்கொழுங்கைகள், இராமநாதன் குடியிருப்பு குறுக்கொழுங்கையில் அமைந்துள்ள 15 வீடுகளுக்கும், கிளிநொச்சி குளக்கட்டு ஞானவைரவர் ஆலயத்தின் ஊடாக செல்கின்ற வீதியில் அமைந்துள்ள 15 வீடுகளுக்கும், 4 ஆம் வாய்க்கால் உதயதாரகை விளையாட்டுக் கழக வீதியில் அமைந்துள்ள பல வீடுகளுக்கும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக மருதநகர் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் அ.சத்தியானந்தம் கூறுகையில்,

எமது கிராமம் நீண்ட வயல் வெளிகளில் அதிக உழைப்பாளர்களைக் கொண்ட துரித முன்னேற்றம் அடைந்து வரும் கிராமமாகும்.

நீண்ட காலத்தின் பின்னர் தற்போது குறிக்கப்பட்ட அளவு நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

எனினும் இவ் வீடுகள் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கியுள்ளன.

இது குறித்து பல்வேறு கடின முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை அவை பயன் அளிக்கவில்லை.

எனவே கூடிய விரைவில் மின்சாரத்தை ஏற்படுத்தி தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றன. (அ-2-285)

## ஏழை மக்களுக்கு பொங்கல்

வவுனியா தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பினர் தைப்பொங்கல் அன்று மிகவும் பின்தங்கிய கிராமத்தில் உள்ள ஒரு கோவிலில் பொங்கி வறுமையில் காணப்படும் ஏழை மக்களுக்கு கொடுக்க உத்தேசித்துள்ளனர்.

எனவே கருணை உள்ளம் கொண்ட உதவக்கூடியவர்கள் அல்லது தனி பொங்கலாக செயது வறுமைக்கோட்டிக்கீழ் வாழும் மக்களுக்கு கொடுக்க விரும்புகின்றவர்கள் அல்லது பொங்கல் பொருட்களை வழங்க கூடியவர்கள் சந்திரகுமார் செல்வராசா என்பவரது 077 500 6796 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வழங்க முடியுமென அவர்கள் கேட்டுள்ளனர். (அ-2)

## கண்டெடுக்கப்பட்ட பிரயாணப்பை உரியவர்களிடம் ஒப்படைப்பு

(முக்கொம்பன்)

பேருந்தொன்றில் ஆவணங்கள் அடங்கிய பிரயாணப்பையொன்றைக் கண்டெடுத்த பேருந்து சாரதியும் நடத்துநரும் அதனை உரியவரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கிளிநொச்சியிலிருந்து நேற்று முன்தினம் மாலை 6.15 மணிக்கு முக்கொம்பன் நோக்கி இ.போ.ச பேருந்தில் பயணித்த கிளிநொச்சி செல்வாநகர்-பாலா கடைச் சந்தியைச் சேர்ந்த செல்லையா குருநாதன் என்பவர் தேசிய ஆள் அடையாள அட்டை, 13 ஆயிரம் ரூபா பணம், பிரயாணப்பை என்பனவற்றை தவறவிட்டுள்ளார்.

இந்நிலையில் இவை அனைத்தையும் கண்டெடுத்த பேருந்து உரிமையாளரும் நடத் துநரும் அதனை உரியவரிடம் பாலா கடை சந்தியில் வைத்து வழங்கியுள்ளனர்.

இவர்களது மனிதாபிமான செயற்பாட்டை பாராட்டி நன்றி தெரிவித்த உரிமையாளர் ஒரு தொகை பணம் வழங்கிய போதும் அவர்கள் அதனை பெற்றுக்கொள்ள மறுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 66 வருட தி.மு.கவுக்கு 46 வருடங்கள் கருணாநிதி தலைவர்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள் அடிக்கடி கிளம்பும் "ராஜினாமா" புரளி அக்கட்சி தொண்டர்களை அலைபாய வைக்கிறது. அக்கட்சியின் உட்கட்சி தேர்தல் ஏறக்குறைய நடந்து முடிந்து விட்டது.

65 மாவட்டச் செயலாளர்களில் 60 பேர் உள்கட்சி தேர்தல் மூலம் தேர்வு பெற்று வருகின்ற ஜனவரி இன்று பொதுக்குழு கூடவிருக்கிறது. இந்த குழுதான் அடுத்த சட்டமன்றத் தேர்தலுக்கான செயற திட்டத்திற்கு வழி வகுக்கும். தேர்வு பெற்றுள்ள மாவட்டச் செயலாளர்கள் பெரும் மெஜாரிட்டியில் ஸ்டாலின் ஆதரவாளர்கள்தான்.

ஒரேயொருவர் அதுவும் தமிழகத்தின் தென்கோடி மாவட்டமான கன்னியாகுமாரி தி.மு.க. மாவட்டச் செயலாளர் மட்டும் கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழியின் ஆதரவாளர். மு.க. அழகிரியின் ஆதரவாளர்கள் அறவே ஓரங்கட்டப்பட்டு விட்டார்கள். கிட்டத்தட்ட திராவிட முன்னேற்றக் கழகம் மு.க. ஸ்டாலினின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டது.

இந்நிலையில் வருகின்ற இன்று நடக்க இருக்கும் பொதுக்குழுவில் தி.மு.க.வின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கு முதலில் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இத்தேர்தலில் தலைவர் பதவிக்கு கலைஞர் கருணாநிதியும், பொதுச் செயலாளர் பதவிக்கு பேராசிரியர் அன்பழகனும், பொருளாளர் பதவிக்கு மு.க. ஸ்டாலினும் போட்டியிடுகிறார்கள்.

இந்தப் போட்டிக்கு முன்பு தான் திடீரென்று "ராஜினாமா" புயல் புறப்பட்டது. பொதுச் செயலா ளர் பதவி தனக்கு வேண்டும் என்று கேட்டு மு.க. ஸ்டாலின் போர்க் கொடி தூக்கியுள்ளார் என்றும், அதனை வலியுறுத்தி தன்னிடமிருந்த பொருளாளர் பதவியை ராஜினாமா செய்து விட்டார் என்றும் சனிக்கிழமை நள்ளிரவிலிருந்து பரபரப்பு. பத்திரிக்கை அலுவலகங்களில் எல்லாம் இந்த வதந்தி காட்டுத்தீ போல் பரவியது.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை அதிகாலையிலேயே சென்னை தேனாம்பேட்டையில் உள்ள சித்தரஞ்சன் சாலையில் இருக்கும் ஸ்டாலின் வீடு முன்பு தி.மு.க. தொண்டர்கள் குவிந்தார்கள்.

"தளபதிக்கு பொதுச் செயலாளர் பதவி கொடுக்க வேண்டும்" என்று கோஷங்கள் எழுப்பினர். "எத்தனை நாளைக்குத்தான் பொருளாளராகவே இருப்பது?" என்று கேள்வி எழுப்பினர். அதே நேரத்தில் கோபாலபுரத்தில் உள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதி வீட்டின் முன்பும் தொண்டர்கள் கூடினர். முன்பு தலைவர் பதவி கொடுக்க வேண்டும் என்று போராடிய ஸ்டாலின் ஆதரவாளர்கள் இப்போது பொதுச் செயலாளர் பதவி கொடுக்க வேண்டும் என்று பேசத் தொடங்கினார்கள். இதனால் கட்சியின் புதிய மாவட்டச் செயலாளர்கள் கூட பதற்றத்துடன் காணப்பட்டார்கள்.



இந்த உள்கட்சி தேர்தலைப் பொறுத்தவரை எத்தனையோ புகார்கள், குறைகள் தலைமைக்கு வந்தாலும் பெரும்பாலும் ஸ்டாலினின் மனம் வருத்தப்படாத வகையிலேயே தலைமை முடிவுகளை எடுத்தது.

இன்னும் சொல்லப்போனால் 65 மாவட்டச் செயலாளர்களில் ஒரேயொரு மாவட்டச் செயலாளர் தன் பரிந்துரைக்காக கொடுக்க வேண்டும் என்று பேராசிரியர் அன்பழகன் போராடிப் பார்த்தார். கடைசி வரை அவர் பரிந்துரைத்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதனுக்கு வட சென்னை மாவட்டச் செயலாளர் பதவியைப் பெற்றுத் தர முடியவில்லை.

ஏனென்றால் அங்கே ரங்கநாதனுக்குப் போட்டியாக களத்தில் நின்றது ஸ்டாலினின் ஆதரவாளரான இன்னொரு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேகர்பாபுதான். பேராசிரியர் அன்பழகனே ஒரு மாவட்டச் செயலாளரைப் பெற முடியாத அளவிற்கு உள்கட்சித் தேரதலில் ஸ்டாலினின் கை ஓங்கியிருந்தது என்பதுதான் கட்சியில் உள்ள மூத்த தலைவர்களின் கருத்தாக இருக்கிறது.

பேராசிரியர் அன்பழகன் மட்டுமல்ல இப்படி பல சீனியர்கள் கட்சியிலிருந்து ஓரங்கட்டப்படுவார்கள் என்றே தெரிகிறது.

ஏற்கனவே மூத்த தலைவர்களில் ஒருவரான ஆர்க்காடு வீராச்சாமி சாதாரண செயற்குழு உறுப்பினர் பதவிக்கு இறக்கப்பட்டு விட்டார். துரைமுருகன் துணைப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தலைமைக் கழக முதன்மை செயலாளர் பதவிக்கு இறக்கி விடப்படலாம் என்ற பேச்சு எழுந்துள்ளது. ராமநாதபுரத்தில் உள்ள சீனியர் தலைவர்களில் ஒருவரான சுப. தங்கவேலன் மாவட்டச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார். அதே போல் முன்னாள் சீனியர் அமைச்சர்களான கோ.சி. மணி, தஞ்சாவூர் எஸ்.எஸ். பழனி மாணிக்கம் போன்றோரும் ஓரங்கட்டப்பட்டு விட்டார்கள். இப்படி சீனியர்களுக்கு விடை கொடுத்து ஜூனியர்களுக்கு முக்கியப் பொறுப்பு என்பதுதான் இப்போது நடந்து முடிந்த தி.மு.க.வின் உள்கட்சித் தேர்தலின் சிறப்பு.

இந்நிலையில் "ஸ்டாலின்ராஜினாமா" என்ற செய்தி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தலைப்புச் செய்தியானது. இதற்கு முன்பு பாராளுமன்ற தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று உண்மையிலேயே ஸ்டாலின் தனது பொருளாளர் பதவியை ராஜினாமா செய்தார்.

அப்போது அதை "நாடகம்" என்று வர்ணித்தாலும், தி.மு.க. தலைவர் கருணாநிதியே தலையிட்டு அந்த ராஜினாமாவை வாபஸ் பெற வைத்தார். ஆனால் இந்த முறை அப்படியொரு ராஜினாமா ஏதுமில்லை. ஆனால் பொதுச் செயலாளர் பதவியைப் பெறுவதற்கு "லீக்" செய்யப்பட்ட வதந்தி அது என்பது பிறகு வெட்ட வெளிச்சமாகி விட்டது.

கலைஞர் கருணாநிதி வீட்டின் முன்பும், தன் வீட்டு முன்பும் தொண்டர்கள் கூடியதைப் பார்த்த மு.க. ஸ்டாலின், "எந்த எதிர்பார்ப்பும் இன்றி கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகிறேன்.

ஆகவே எந்த வதந்திகளையும் (பொருளாளர் பதவி ராஜினாமா, பொதுச் செயலாளர் பதவி கேட்பது) யாரும் நம்ப வேண்டிய அவசியமில்லை. வேண்டும் என்றே தி.மு.க.வில் இருக்கக்கூடிய தொண்டர்களுக்கிடையே ஒரு குழப்பத்தை ஏற்படுத்த இந்தக் காரியம் நடைபெற்று இருக்கிறது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அறிக்கை வெளியிட்டார். அதையே தன் இல்லத்திற்கு பத்திரிக்கையாளர்களை அழைத்துத் தெரிவித்தார். அப்படித் தெரிவித்த கையோடு கோபாலபுரம் சென்று தன் தலைவர் கருணாநிதியைச் சந்தித்தார்.

ஆகவே தி.மு.க.வில் அடுத்தபடியாக பொதுச் செயலாளர் பதவிக்கு மு.க. ஸ்டாலின் வருவது இந்த உள்கட்சித் தேர்தலின் முடிவில் நடக்காமல் போகிறது. அது மட்டுமல்ல கட்சியின் உயர்மட்ட கொள்கை முடிவுகளை எடுக்கும் பொதுக் குழுக் கூட்டம் இன்று நடைபெறுகின்ற நேரத்தில் "ஸ்டாலினுக்கு இதைவிட பெரிய பதவி" என்ற கோஷம் பொதுக்குழுவில் எழும்ப வாய்ப்பில்லை. ஏனென்றால் இந்த அறிக்கையிலேயே "நான் பொருளாளர் பதவிக்குப் போட்டியிடுகிறேன்.

அதற்கான வேட்பு மனுவில் கையெழுத்துப் போட்டு கொடுத்து விட்டேன். உள்கட்சித் தேர்தலைப் பொறுத்தவரை இதுதான் நிலைமை" என்று தெளிவுபடுத்தி விட்டார்.

பொதுக்குழுவில் கட்சித் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் பதவி தேர்தல்கள் முடிந்த பிறகு, தலைமைக் கழகத்தில் உள்ள பதவிகளுக்கும், கட்சியில் உள்ள அணிகளுக்கும் புதிய நிர்வாகிகள் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது. இந்த நியமனங்கள் எல்லாம் முடிந்து 9ஆம் தகதிக்குப் பிறகு தி.மு.க.வின் 14ஆவது உள்கட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் பொறுப்பேற்பார்கள். அவர்களின் பதவிக்காலம் அடுத்த ஐந்து வருடங்களுக்கு இருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை 14 உள்கட்சித் தேர்தல்களை சந்தித்துவிட்டது. 1949இல் துவங்கப்பட்ட இந்த கட்சிக்கு இப்போது வயது 66.

அந்தக் கட்சியின் தலைவராக மீண்டும் தேர்வு செய்யப்படப் போகும் கலைஞர் கருணாநிதி 1969லிருந்து தொடர்ந்து 46 வருடங்களாக தி.மு.க. தலைவராக இருக்கிறார். அதேபோல் பொதுச் செயலாளராக இருக்கும் பேராசிரியர் அன்பழகன் 1977 இல் இருந்து 38 வருடங்களாக அப்பதவியில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பழமை வாய்ந்த மாநிலக் கட்சி ஒன்றில் 46 வருடம் தலைவராக வும், 38 வருடம் பொதுச் செயலாளராகவும் இருவர் இணைந்து கட்சியை வழி நடத்திச் செல்வது அனேகமாக திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் இருக்கும்.

இப்போது ஜனவரி 9ஆம் தகதியிலிருந்து பொறுப்பேற்கப் போகும் நிர்வாகிகள்தான் அ.தி.மு.க.வை 2016 சட்டமன்றத் தேர்தலில் எதிர்கொள்ளப் போகிறார்கள்.

அது மட்டுமல்ல புதிய உத்வேகத்துடன் களத்திற்கு வரும் பா.ஜ.க.வையும் தி.மு.க. எதிர்கொண்டு சமாளிக்க வேண்டிய கட்டாயத்தில் அக்கட்சி இருக்கிறது.


அதனால்தான் இப்போது ஒரு பக்கம் பா.ஜ.க.வை சாடி அறிக்கைகளும், இன்னொரு பக்கம் அ.தி.மு.க.வை எதிர்த்துப் போராட்டங்களும் என்ற வியூகத்தைக் கடைப்பிடிக்கிறது.

ஆக, அடுத்த சட்டமன்றத் தேர்தலை சந்திக்கும் புதிய நிர்வாகிகள் தி.மு.க.வில் ரெடி- அவர்களின் அஜெண்டா என்ன என்பது இன்று நடக்கும் பொதுக்குழுவில் தீர்மான வடிவில் வெளிவரும்!

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட ஒன்றிணையுங்கள்



## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

உலகத்தில் எங்கு இடம்பெற்றாலும் அனைத்து வகையான பயங்கரவாதத்தையும் எதிர்த்து போராட உலகம் ஒன்றாக இணையவேண்டும் என வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாரிசில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலைக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



பாரிசில் நேற்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தனது இரங்கலை தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாக்குதல் குறித்து தனது வேதனையும் தெரிவித்துள்ளார். "உலகத்தில் எங்கு இடம் பெற்றாலும் அனைத்து வகையான பயங்கர வாதத்தையும் எதிர்த்து போராட உலகம் ஒன்றாக சேர வேண்டும்" எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனது மெதமுன இல்லத்தில் இருந்து பேசும் போது தெரிவித்ததாக ஜனாதிபதியின் சர்வதேச ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்தின் கொடுமையை 30 ஆண்டுகள் அனுபவித்த இலங்கை, அதன் கொடூரத்தை நன்கு உணர்கிறது. பயங்கரவாதம் ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கு மட்டும் அன்றி அது உலகின் அனைத்து பாகங்களிலும் காணப்படுகிறது என்பதை இந்தச் சம்பவம் நிரூபிக்கிறது. பயங்கரவாதம் ஒரு நாட்டை எப்படி எளிதாக பலவீனப்படுத்தும் என்பதை இந்தக் கொடூரமான தாக்குதல் நினைவூட்டுவதுடன் அரசாங்கங்கள் விழிப்புடன் இருப்பதனால் பயங்கரவாதம் தலைதூக்காமல் இருப்பதை உறுதி செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி மகிந்த மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடினமான நேரத்தில் பிரான்ஸ் அரசாங்கம் மற்றும் மக்களுககு தனது ஒற்றுமையை வெளிபடுத்திய ஜனாதிபதி, இந்த கொடூரமான சோகத்தை சமாளிப்பதில் இலங்கை அரசினதும் மக்களினதும் முழு ஆதரவை வழங்குவதாகவும் ஜனாதிபதி மகிந்த மேலும் உறுதியளித்துள்ளார். (இ-5)

# முஸ்லிம்களைப் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுப்பு

(கொழும்பு)

முஸ்லிம்கள் தாம் விரும்பும் வேட்பாளர்களுக்கு வாக்களித்து விட்டு தொடர்ந்தும் நாட்டின் அமைதிக்காகவும் சமாதானம் நிலவவும் அனைத்து சமூகங்களோடு ஐக்கியமாக வாழவும் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.ஏ. முபாரக் விடுத்த விசேட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வேட்பாளர்களும் வாக்காளர்களும் தாம் சார்ந்த தரப்பு வெற்றியடைய வேண்டும் என்பதில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் இந்நாட்டு மக்கள் அனைவரும் சாதி சமய வேறுபாடுகளின்றி நிதானமாகவும் அமைதியாகவும் நடந்து கொள்ள கடமைப்படுகி றார்கள்.

வீணான தர்க்கங்களில் ஈடுபட்டுக் கொள்வதன் மூலமோ தேவையற்ற விதமாக மாற்றுக் கருத்துடையோரை சீண்டிப் பார்ப்பதன் மூலமோ நாம் எதனையும் சாதித்து விட முடியாது. ஒவ்வொருவரும் நேர காலத்தோடு வாக்குச் சாவடிக்குச் சென்று தமது வாக்கினை தாம் விரும்பியவருக்கு வழங்கி விட்டு தமது இருப்பிடம் திரும்பி அமைதியாக இருப்பதே தேவையற்ற பிரச்சினைகளில் இருந்து தவிர்ந்து கொள்ள வழியாகும். வதந்திகளில் சம்பந்தப்படாமலும் உணர்ச்சி வசப்படாமலும் இருப்பதன் மூலம் வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும்.

பொதுவாக தேர்தல் காலங்களில் தீய சக்திகள் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்த முனைவதுண்டு. அச்சந்தர்ப்பங்களிளெல்லாம் விவேகமாகவும் நிதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும். தேர்தலின் பெயரால் சாதி, மத, குரோதங்கள் வளரவும் பிரச்சினைகள் தோன்றவும் இடமளிக்கக் கூடாது. பள்ளி நிர்வாகங்கள் உலமாக்கள் ஆகியோர் பொது மக்களுக்கு தேவையான வழி காட்டல்களை வழங்க வேண்டும்.

ஒவ்வொருவரும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி விட்டு தொடர்ந்தும் அமைதிக்காகவும் நாட்டின் சமாதானம் நிலவவும் சகல சமூகங்களோடு ஐக்கியமாக வாழவும் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என உலமா சபை முஸ்லிம்களைக் கேட்டுக்கொள்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

### மரத்தில் ஏறிய வாக்காளர் ஒருவர் இறங்கமாட்டேன் என அடம்பிடிப்பு

வாக்களித்துவிட்டு, வாக்களிப்பு நிலையத்திலிருந்து வெளியேறிய வாக்காளர் ஒருவர் வாக்குச்சாவடிக்கு அண்மையில் உள்ள மரமொன்றில் ஏறியமர்ந்து கொண்டுள்ளார்.

தான் வாக்களித்து விட்டதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த தேர்தலில் வெற்றியீட்டா விட்டால் மரத்திலிருந்து இறங்க போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் காலி, வந்துரம்ப எனுமிடத்திலேயே நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. (இ-5)

# தொலைக்காட்சி நிறுவனங்களின் மேன்முறையீட்டு மனு தள்ளுபடி

ஜனாதிபதி மக்கள் தொடர்பு அல்லது அதற்குச் சமமான நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு கடுவெல மாவட்ட நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை நீக்குமாறு 3 தொலைக்காட்சி நிறுவனங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் முன்வைத்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சுயாதீன தொலைக்காட்சி, தேசிய ரூபவாஹினி மற்றும் சுவர்ணவாஹினி மற்றும் தெரண ஆகிய தொலைக் காட்சிகளுக்கே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் சட்டத்தரணி கடுவெல நீதிமன்றத்தில் இந்த தடை உத்தரவைப் பெற்றிருந்தார்.

இந்நிலையில் தடையுத்தரவை நீக்குமாறு சுயாதீன தொலைக்காட்சி, ரூபவாஹினி மற்றும் சுவர்ணவாஹினி ஆகிய தொலைக்காட்சி சேவைகள் இணைந்து நேற்று முன்தினம் மேன்முறையீடு செய்திருந்தன.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### நல்ல பார்வை

''என்ன சேர் உலகம்... இவ்வுலகில் நடைபெறும் காரியங்கள் எதுவுமே சரியில்லை'' என்று கவலைப்பட ஒருவர் கூறினார்.

"என்ன இது...இப்படி ஒரேயடியாக அலுத்துப் பேசுகிறீர்களே...?" என்று கேட்டேன்.

"பின்னர் என்ன சேர்... நல்ல விடயமே கண்ணுக்குப் புலப் படமாட்டாது போல் உள்ளது... அனைத்துமே பிரச்சினையாக இருக்கின்றது..." என்றார் அவர்.

சரி...சற்று அமைதியாக இருங்கள். உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்... என்று ஆரம்பித்தார்.

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவருக்குத் திடீரென ஒரு நாள் தலை வலிக்க ஆரம்பித்து விட்டது.

ராஜா என்றால் தலைவலி வராதோ. பெரிய தலைவலியா வந்துவிடும்.

அரண்மனையிலே வைத்திய வசதிக்கு என்ன குறைச்சல். நிறைய வைத்தியர்கள் ஒவ்வொருவிதமான மருந்தைக் கொடுத்தார்கள். வலி குறையவில்லை. தலைவலிக்கு என்ன காரணம் என்பதை அவர்களால் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. வலி தொடர்ந்தது.

இது தொடர்பாக அமைச்சர் ஒருவர் ஆலோசனை வழங்கினார்.

''காட்டிலே ஒரு முனிவர் இருக்கிறார்... அவரை அழைத்து வந்து காட்டினால் ஏதாவது யோசனை சொல்வார்'' என்றார்.

"சரி போய் அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று ராஜா உத்தரவு போட்டார். முனிவரைப் போய் அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

"மன்னா! மருந்துவகைகள் மூலமாக உன்னுடைய தலை வலியைக் குணப்படுத்த முடியாது. நீ எங்கே போனாலும் வந்தாலும் பச்சை வர்ணம் உன் கண்ணிலே தென்படுகிற மாதிரி பார்த்துக்கொள். பச்சை நிறம் கண்ணுக்கு நல்லது. பச்சை நிறத்தை பார்த்துக் கொண்டிருந்தால் உன் தலைவலி பறந்து போய் விடும். இதுதான் வைத்தியம்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மறுநாளே அந்த ராஜா மந்திரிகளோடு ஆலோசனை நடத்தினார்.

அதன்பின்னர் அரண்மனை தொடக்கம் வீடுகள் வரை பச்சை நிறத்தில் வர்ணம் பூசப்பட்டது. ஊரிலே உள்ளவர்கள் அனைவரும் பச்சை உடை அணிய வேண்டும். பச்சை நிறத்தைத் தவிர வேறு எந்த நிறமும் ராஜா கண்ணிலே தென்படக் கூடாது என்று கடுமையான உத்தரவு அந்த ஊரிலே பிறப்பிக் கப்பட்டது.

சிறிது நாட்களிலே எந்தப் பக்கம் பார்த்தாலும் பசுமைப் புரட்சி–அப்படியாக அந்த ஊர் மாறியது.

காட்டுக்குச் சென்ற முனிவர் நாட்கள் கடந்த நிலையில் மறுபடியும் அரண்மனைக்கு வந்தார்.

வந்து பார்த்தால்... ஊர் பூராகவும் பச்சை நிறம். இது என்ன அதிசயம் என்று திகைத்துப் போனார்.

இவர் அரண்மனைக்குள் நுழைவதற்கு முன்னர் பெயின்ட் வாளியோடு இருவர் ஓடி வந்தனர்.

''முனிவரே சற்று நில்லுங்கள். உடல் முழுவதும் பச்சை நிறம் அடிக்க வேண்டும். அதன்பின்தான் நீங்கள் உள்ளே போகலாம்'' என்றனர்.

முனிவர் திகைத்துப் போனார். "என்னடா இது... நமது யோசனை இந்த அளவிற்கு கொண்டு வந்து விட்டதே'' என்றார்.

அதன்பின்னர் ஆசாமி ராஜாவை சந்தித்தார். அப்போது ''அரசனே! உனக்கு இந்த பச்சை நிறத்தை பார் என்று கூறினால் இப்படியாக அரசாங்க பணத்தை வீணடிப்பதா? உன்னுடைய பார்வை மந்தமடைந்து விட்டதா?'' என்று அவர் கேட்டார்.

''அது எப்படி பார்வையை மாற்றிக்கொள்வது?'' என்றார் அரசன்.

"ஒரு பச்சை நிற கண்ணாடியை அணிந்து கொண்டால் பார்ப்பது பூராகவும் பச்சையாகத் தெரியும். அதற்குப் போய் இவ்வளவு பணத்தை விரயமாக்கியுள்ளாயே?'' என்று முனிவர் கூறினார். இந்த உலகம் பூராகவும் நமது உள்ளுணர்வுகளின் வெளிப்பாடுதான் என்ற உண்மையை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட பலன்கள் 2015

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| செவ்வாய் | புது வருட கிரக நிலை | | குரு (வக்) |
| புதன் சுக்ரன் | | | |
| சூரியன் | சனி | | ராகு |

**விரயச் சனியின் ஆதிக்கம்! விழிப்புணர்ச்சி தேவை!**

**பதவிக்கு ஆசைப்படமால் உதவிக்கு ஆசைப்படும் நல்ல உள்ளம் படைத்த தனுசு ராசி அன்பர்களே!**

உங்களுக்கு புத்தாண்டு ஏழரைச் சனியன் தொடக்கத்தில் பிறக்கிறது. அனைவரது மனதிலும் இடம் பிடித்து அருமையாகப் பழகும் உங்களுக்கு, இப்போது வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் வந்துவிட்டது ஏழரைச் சனி. இதனால் சந்தோஷக் குறைபாடுகள் உருவாகிவிடுமோ என்ற கவலை உங்களைக் கவ்விக் கொள்ளலாம்.

இருந்தாலும் சனி உங்கள் ராசிக்கு 2,3 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குவதால் பெரிய அளவில் பாதிப்புகளையோ, விரயங்களையோ கொடுக்காது. அதுவும் பொங்கு சனியின் ஆதிக்கத்தில் இருப்பவர்களுக்கு செல்வம் பொங்கி வரும். செயல்பாடுகளில் வெற்றி கிடைக்கும். உங்கள் ஜாதக அடிப்படையில் மங்கு சனியா, பொங்கு சனியா, மூன்றாம் சுற்றில் வரும் சனியா என்பதை அறிந்து கொண்டு செயற்படுவது நல்லது.

முன்கோபக்காரர் என்று பலரும் உங்களை வர்ணிப்பார்கள். அரக்க குணமும், இரக்க குணமும் உங்களுக்கு இணைந்தேயிருக்கும். அன்றாட வாழ்க்கையில் யாருக்கும். அச்சுறுத்தல் ஏற்பட்டால் உங்களை நோக்கித் தான் ஓடிவருவர். ஏனென்றால், தங்கு தடைகள் அகல தலைமைப் பதவியில் உள்ளவர்களைத் தெரிந்து வைததிருப்பவர்கள் நீங்கள் தான். அதிகப் புகழ் பெற்ற உங்களுக்கு இல்லத்திற்குள் மட்டும் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

இப்படிப்பட்ட உங்களுக்கு இந்தப் புத்தாண்டின் தொடக்கம் குரு பார்வையாலும், 10ஆம் இடத்து ராகுவாலும் பலவிதமான முன்னேற்றங்களை வரவழைத்துக் கொடுக்கப் போகின்றது. என்னயிருந்தாலும் விரயச் சனியின் ஆதிக்கம் கொஞ்சம் கூடுதல் விரயத்தைக் கொடுப்பதோடு மனநிம்மதியையும் குறைக்கலாம். எனவே அப்போதைக்கப்போது வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. வாரந்தோறும் சனிக்கிழமை விரதமிருந்து ஆனைமுகப் பெருமானையும், சனி பகவானையும் வழிபட்டு வாருங்கள்.

செல்ல வேண்டிய இடம் ஆலயங்கள் தான். பிறக்கும் புத்தாண்டு சனிக்குரிய "8" எண் ஆதிக்கத்தில் பிறக்கிறது. எனவே மந்தன் சனியால் மகத்துவம் அதிகம் பெற வழிவகை செய்து கொள்ளுங்கள்.

**01.01.2015 முதல் 04.07.2015 வரை!**



வருடத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் குரு அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். இருந்தாலும் உச்சம் பெற்று மூன்று இடங்களை அவர் பார்க்கிறார். அந்த மூன்று இடங்களும் வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகும். எனவே, குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். இழந்த சொத்துக்களை மீண்டும் பெறுவீர்கள். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். முல்லைப்பூ மாலை சூட்டிக் குருவை வழிபடுவதன் மூலம் மேலும் நீங்கள் நன்மைகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

ஏழரைச் சனியில் விரயச் சனி என்பதால் சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. எதைத் தொட்டாலும் செலவு நடைகள் கூடுதலாக வருகின்றதே என்று நினைப்பீர்கள். அசையா சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெற்றோர்களின் மணிவிழாக்கள், பிள்ளைகளின் மணவிழாக்கள், பேரன், பேத்தியரின் காதுகுத்து விழாக்கள் போன்ற சுபநிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறும் வாய்ப்பு இருக்குமேயானால் அவற்றை சிறப்பாகச் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்.

சூரிய பலம்உங்கள் ராசியில் இருப்பதால் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். காரியம் பெரிதா, வீரியம் பெரிதா என்பது ஒரு பழமொழி. எனவே முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. கோபத்தால் சில நல்ல வாய்ப்புகளையும் இழக்க நேரிட

கல்வி முன்னேற்றத்திற்கும், அவர்கள் கடல் தாண்டி சென்று படிப்பதற் கும் வாய்ப்பு வந்தால் அந்த முயற்சிக்கு செலவிட்டு மகிழலாம்.

**குருவின் பார்வை பலன்கள்!**

ஆண்டின் தொடக்கத்தில் குருபகவான் 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். அங்கிருந்து 2,4,12 ஆகிய இடங்களில் தனது பார்வையைப் பதிக்கிறார். எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. வாக்கு, தனம், குடும்பம், தாய், சுகம், பயணம் போன்ற ஆதிபத்யங்களை குருபகவான் அடைய வைக்க வழிகாட்டும்.

குருவைப் பொறுத்தவரை இருக் குமிடத்தைக் காட்டிலும் பார்க்குமிடத்திற்குத்தான் பலன்அதிகம். சனியைப் பொறுத்தவரை பார்க்குமிடத்தைக் காட்டிலும் இருக்குமிடத்திறகுத்தான் பலன் அதிகம். எனவே குரு பார்வை பதியும் இடம் மூன்றும் புனிதமடைந்து இனிய பலன்களை உங்களுக்கு வாரி வழங்கும்.எட்டாமிடத்தால் விரயங்கள் ஏற்பட்டாலும் அது பார்க்கும் இரண்டாமிடம் தனஸ்தானம் என்பதால் பணம் வந்து தான் செலவாகுமே தவிர வராமல் செலவாகாது. எனவே உங்கள் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள குரு வழிபாட்டும், இல்லத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்க்க வழிபிறக்கும். கிரைண்டர், மிக்ஸி, தொலைக்காட்சி பெட்டி போன்றவைகள் பழசாகிவிட்டதே என்று சொல்லி அதை கொடுத்துவிட்டுப் புதியதாக வாங்க முன்வருவீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொணடு வந்து அணிந்து




அழகு பார்க்கும் சூழ்நிலை உருவாகும். வீடு கட்டும் முயற்சி பாதியில் நிறகிறதே என்ற கவலை இனி அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணி நிரந்தரம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படும். இக்காலத்தில் ஆரோக்கியத்தில் மட்டும் கொஞ்சம் அக்கறை தேவை.

**6.7.2015 முதல் 31.12.2015 வரை!**

இக்காலத்தில் குருப்பெயர்ச்சியாகி உங்

காரியத்தை தொடங்கிவிட்டால் அதற்குரிய தொகை எப்படியாவதுவந்து சேர்ந்துவிடும். மூடிக்கிடந்த தொழிலில் இனி திறபபு விழாக்காண்பீர்கள். தக்கவிதத்தில் பொருளாதார நிலை உயரும். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும். மதிநுட்பத்தால் மகத்தான பலனைக் காண்பீர்கள். அதிகாரவர்க்கத்தினரால் ஏற்பட்ட கவலைகள் நீங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூர்வீக சொத்துத் தகராறு களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். கூடப்பிறந்தவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். ஜூலை மாதத்திற்கு மேல் சுபிட்சங்களே அதிகரிக்கும் என்று சொல்லலாம்.

**தனுசு ராசியில் பிறந்த பெண்களுககு!**

வருடத் தொடக்கத்தில் குடும்ப சுமை கூடும். வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் பகையாகலாம். தொழில் வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும். திடீர் இடமாற்றம், ஊர்மாற்றங்கள் ஒருசிலருக்கு ஏற்படலாம். குடும்பத்திலுள்ளவர்களின் குணமறிந்து நடந்து கொள்வது நல்லது. குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் மிகுந்த நற்பலன்களை காணப்போகிறீர்கள். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறறாலும் பார்க்கும் குருவால் பணக்கவலை அகலும். கணவன்-மனைவிக்குள் பாசம் மேலோங்கும். இனத்தார் பகை மாறும். ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். வீடு வாங்கும் யோகம் கூட ஒரு சிலருக்கு உண்டு. ராகு-கேது பிரீதிகளை செய்வதன் மூலமும், அனுமன் வழிபாட்டின் மூலமும் நற்பலன்களை வரவழைத்துக் கொள்ள முடியும்.

**குருவின் வக்ரகாலமும், சனியின் வக்ரகாலமும்!**

வருடத் தொடக்கத்தில் வக்ரமாகும் குரு 14.4.2015 வரை வக்ரம் பெறுகிறார். அதே நேரத்தில் சனிபகவான் 15.3.2015இல் விருச்சிகத்தில் வக்ரம்பெறுகிறார். 12.6.2015 முதல் 5.9.2015 வரை துலாத்தில் சனி வக்ரம் பெறுகிறார். இந்த வக்ரகாலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. அப்பொழுதுதான் குழப்பங்களிலிருந்து விடுபட இயலும். சொந்தங்களின் பகையை வளர்த துக்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். சனியின் வக்ர இயக்கத்தால் எதிர்காலத் திட்டங்கள் நடைபெறுவதில் தாமதங்கள் ஏற்படும். லாபம் வருவதில் தடைகள் உருவாகலாம். தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ள முன்வருவீர்கள். இக்காலத்தில் குரு, சனி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

ஆண்டு முழுவதும் நற்பலன் களைப் பெற குரு தட்சிணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமை தோறும் விரதமிருந்து ராமதூதனாம் ஆஞ்சநேயரை வழிபடுவது நல்லது.

நாளை மகரம்...

## விரயச் சனியின் ஆதிக்கம்! விழிப்புணர்ச்சி தேவை!

இல்லத்தில் காகத்திற்கு சோறு வைப்பதன் மூலமும் இனிய பலன்களை காணலாம்.

உங்களது சுயஜாதகத்தில் சனி எப்படி இருக்கிறார்?. சனியைப் பார்க்கும் குருவின பலம் எப்படி உள்ளது? என்பதை அறிந்து நடப்பாண்டின் கிரக நிலைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அனுகூலமாக இருந்தால் ஆண்டு முழுவதும் நற்பலன்கள் கிடைக்கும். இல்லையேல் வேண்டிய பலனை விரும்பி வரவழைத்துக் கொள்ள நீங்கள்

லாம். வீரியத்தைக் குறைத்து காரியத்திலேயே கண்ணும், கருத்துமாக இருந்தால் எண்ணிய காரியங்களெல்லாம் எளிதில் நடைபெறும். வருடம் தொடங்கும் பொழுதே 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் உச்சம்பெற்று இருக்கிறார். புத்திர ஸ்தானம் மற்றும் விரயஸ்தானத்திற்கு அதிபதியானவர் உச்சம் பெறும் பொழுது பிள்ளைகளால் விரயம் உண்டு என்பதை அறிந்து கொளளுங் கள். குறிப்பாக அவர்கள்

கள் ராசியைக் குரு பார்க்கப் போகின்றது. குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் மட்டுமில்லாமல் 3,5 ஆகிய இடங்களிலும் பதிவாகின்றது. மூன்றாமிடம்தான் முன்னேற்றத்திற்கு வித்திடும் வெற்றிகள் ஸ்தானம் ஆகும். வெற்றிகள் ஸ்தானத்தை வியாழன் பார்க்கும் பொழுது தொட்டகாரியங் களெல்லாம் வெற்றிபெறும். தொகையை வைத்துக் கொண்டு காரியம் தொடங்குவது தான் உலக வழக்கம். ஆனால் நீங்கள் இக்காலததல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நேற்று


























ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பு நேற்று நாடு பூராகவும் இடம்பெற்றதோடு வடக்கிலும் இடம்பெற்றது. மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

(படங்கள்:-
உ.சாளின்,
ஆர்.குமார்,
சி.கஜேந்திரகுமார்)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நேற்று



ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் மூன்றாவது முறையாக போட்டியிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரது சொந்த இடமான அம்பாந்தோட்டை மெதமுலன டி.ஏ.ராஜபக்ஷ மகா வித்தியாலயத்தில் வாக்களித்த போது...










அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாக்களித்த போது...



அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான்.



அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.



அமைச்சர் விமல் வீரவன்ச



பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார்



பிரதியமைச்சர் எம்.ஏ.எல்.ஹிஸ்புல்லா




அமைச்சர் பிரியதர்சன யாப்பா





முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நேற்று


பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தனது சொந்த இடமான பொலனறுவையில் சி.வித்யாலோக விஹாரை வாக்குச் சாவடியில் வாக்களித்த போது...

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தனது ஆதரவாளர்களுடன் வாக்களித்த போது....



முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் ...





முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க....



பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.....



பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.....



பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரவல் அகழப்படுவதால்
# மரங்கள் அழிவு

**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் மணல் மற்றும் கிரவல் அகழ்வு காரணமாக பெருமளவு மரங்கள் அழிவடைந்து வருவதுடன் சூழலியல் பாதிப்புகளும் பெருமளவில் இடம்பெற்று வருவதாக அப்பகுதி வாழ்மக்கள் தெரிவிக்கின்றனர்.**

2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடக்கம் இவ்விரு மாவட்டங்களிலும் வீதிப்புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதையடுத்து, புனரமைப்புப் பணிகளுக்காக பெருமளவான கிரவல் மண் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் யூனியன் குளம், அக்கராயன், இராமநாதபுரம் ஆகிய கிராமங்க ளிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காயின் அமதிபுரம், கோட்டை கட்டியகுளம், புத்து வெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயங்கன்குளம், அம்பகாமம், மாந்தை கிழக்கு, கொக்குளாய், கொக்குத்தொடுவாய், ஒட்டு சுட்டான் ஆகிய பகுதிகளில் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு கிரவல் மண் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இரு மாவட்டங்களிலுமுள்ள ஆற்றுப்படுக்கைகளில் நாள் தோறும் பெருமளவு மணல் களவாக வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்களின் அனுமதியில்லாமல் அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் பெறப்படுகின்ற அனுமதிகளுடன் முல்லைத்தீவின் கொக்காவில் பகுதிகளிலும், கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் பின்பகுதிகளிலும் பெருமளவு மணல், கிரவல் அகழ்வுகள் நடைபெறுகின்றன.

இரு மாவட்டச் செயலகங்களிலும் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் மணல், கிரவல் அகழ்வு, களவாக மரம் வெட்டுதல் போன்ற விடயங்கள் மக்களின் பிரதிநிதிகளினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகள எடுக்கப்படாததன் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்போது சூழலியல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அம்மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என முல்லைத்தீவு மற்றும் இளிநொச்சி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2)

## இருவர் தடுத்து வைப்பு

(கிளிநொச்சி)

ஜனாதிபதித் தேர்தல்-2015 இற்கான வாக்குப் பதிவுகள் நேற்றைய தினம் நடைபெற்ற வேளை கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அர சினர் தமிழ் பாடசாலையில் தேர்தல் விதிமுறைகளை மீறி வேட்பாளர் ஒருவரின் படம் பொறித்த சின்னம் அடங்கிய அட்டைகள் வைத்திருந்த நபரை தேர்தல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸார் தடுத்து வைத்திருந்தனர். இதேவேளை கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிட் மைத்திரிபால சிறிசேனவின் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமை ப்பாளர் கருப்பையா ஜெயக்குமார் நேற்றையதினம் பொலிஸாரினால் வாக்களிப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த தேர்தல் நிலையத் திற்கு சென்று தேர்தல் கண்காணிப்பாளரிடம் தன்னை அறிமுகப்படுத்திய போது திடீரென குறுக்கிட்ட நபர் ஒருவர் கிளிநொச்சி அரச அதிபர் கூறியதாக கூறி பொலிஸாரிடம் தெரியப்படுத்தி அவரை தடுத்து வைத்து பின்னர் அன் றைய தினமே மாலை 3 மணியளவில் விடுவிக் கப்பட்டார். இதனால் தேர்தல் நடவடிக்கை அனைத்தும் முடக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2-271)

## கனகராயன்குளம் மகா வித்திக்கு ஆசிரியர் விடுதி அமைத்துத்தருக!
### அதிபர் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குள் அமைந்துள்ள கனகராயன்குளம் மகா வித்தியாலய பாடசாலை ஆசிரியர்களுக்கு விடுதி அமைத்துத் தருமாறு வலயக் கல்வி அலுவலகம் மற்றும் மாகாணக் கல்வி அலுவலகம் ஆகியவற்றில் கோரிக்கைகள் முன்வைத்துள்ளதாக வித்தியாலய அதிபர் தெரிவித்தார்.

1சி பாடசாலையாகவிருந்த இந்த பாட சாலை கடந்த 2014ஆம் ஆண்டு ஆயிரம் பாடசாலை திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டு 1 ஏபீ பாடசாலையாக தரமுயர்த்தப்ப ட்டது.

ஆசிரியர் விடுதியில்லாத காரணத்தால் ஆண் ஆசிரியர்கள் தங்கள் உடைமைகளை பாடசாலையிலுள்ள அறையொன்றில் வைத்து விட்டு, வகுப்பறைகளிலேயே தங்கி வருகின்றனர்.

பெண் ஆசிரியைகள் அருகிலுள்ள வீடுகளில் மாதாந்த வாடகை அடிப்படையில் தங்கி வருகின்றனர்.

முன்னர் அதிகஷ்டப் பிரதேச பாடசாலையாக இருந்த போது, வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட்டது.

ஆனால் 1 ஏபீ பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டும் ஏ - 9 வீதியில் இந்தப் பாடசாலை அமைந்திருப்பதால் அதிகஷ்டப் பகுதி பாடசாலை என்ற நிலை மாற்றப்பட்டது. இதனால் ஆசிரியர்களுக்கான மேலதிக கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டன.

ஆசிரியர்களை தங்க வைப்பதற்கு ஆசிரியர் விடுதி அவசியமாகவிருக்கின்றமையால் அதனை உடனடியாக நிவர்த்தி செய்து தரும்படி கோரிக்கைகள் முன்வைத்துள்ளோம்.

இது தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கருத்து கூறுகையில், "இவ்வாறு பல பாடசாலைகள் தமக்கு வசதிகள் செய்து தரும்படி கோரிக்கைகள் முன்வைத்துள்ளன. நிதியுதவி கிடைக்கும் போது, முனனுரிமை அடிப்படையில் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன.

நிதியுதவி கிடைக்கின்ற போது, மாவட்ட ரீதியில் சமமாக அவை பகிரப்பட்டு, அந்தந்த மாவட்டங்களிலுள்ள தேவைகள் தேவைப்படும் பாடசாலைகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றார். (அ-2)




## கிளி.யில் தனியார் பேருந்து நிலையம் அமைக்கப்படவில்லை

கிளிநொச்சியில் தனியார் பேருந்து நிலையம் அமைக்கப்படாமையால் பொதுமக்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கிளி நொச்சியில் மக்கள் மீள் குடியேற்றப்பட்ட பின் இதுவரை தனியார் பேருந்து நிலையம் அமைக்கப்படவில்லை. இதனால் தனியார் பேருந்துகள் கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு முன்பாகவுள்ள வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் பொதுச்சந்தை மற்றும் வீதிப்போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி டிப்போ சந்திப்பகுதியில் பல ஏக்கர் கணக்கான பொதுக் காணிகள் காணப்படுகின்ற போதும் பொது மக்களின் சௌகரியமான போக்குவரத்துக்கு வழி செய்யும் வகையிலான செயற்பாடுகள் எவையும் 2010 ஆம் ஆண்டிற்கு பி[illegible] மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து நிலையமும் ஒழுங்கமைப்பு இன்றி செயற்படுகின்றமையால் குறித்த பிரதேசங்களிற்கான பேருந்துகளை இனங்காண முடியாது முதியோர் திண்டாடுவதையும் அவதானிக்க முடிகின் றது.

கிளிநொச்சி வீதிக்கான அனைத்து பேருந்துகளும் தரித்து நிற்கும் தரிப்பிடமாகவும் குறித்த பேருந்து நிலையமே காணப்படுவதால் போக்குவரத்திற்கான பேருந்து எதுவென இனங்காண முடியாது பொது மக்கள் திண்டாடி வருகின்றனர். எனவே அரச மற்றும் தனியார் பேருந்து நிலையங்களை அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடி க்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோ[illegible]க்கை விடுக்கின்றனர். (அ-2-272)

## பாடசாலைகளில் இருந்த குளவிக் கூடுகள் நேற்றும் அழிக்கப்பட்டன

(குருமன்காடு)

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்ட 5 பாடசாலைகளில் இருந்து குளவிக்கூடுகளை அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரிவினரால் அழிக்கப்பட்டுள்ளது.

கடந்த வட மாகாணசபை தேர்தலின் போது வவுனியா பதுக்குளம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் குளவி கொட்டி தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த அலுவலர் ஒருவர் மரணித்திருந்த நிலையில் இம்முறை வாக்களிப்பு நிலையங்களில் குளவிக்கூடுகள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, காத்தார் சின்னக்குளம் பாடசாலை, புதுக்குளம் மகாவித்தியாலயம், விபுலானந்தாக்கல்லூரி மற்றும் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நேற்று முன்தினமும் நேற்றைய தினமும் குளவிக கூடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இக்குளவிக்கூடுகள் அழிக்கப்பட்டுள்ளபோதிலும் இதுவரை காலமும் பாடசாலை மாணவர்கள் குளவி கூடுகள் உள்ள நிலையிலேயே பாடசாலையில் கற்றல்செயற்பாட்டை முன்னெடுத்துள்ளமை தொடர்பில் பலரும் கவலை தெரிவித்துள்ளனர் (அ-2-250)

## பாலத்தை புனரமையுங்கள்

கிளிநொச்சி இராமநாதன்புரம் குளத்திற்கு அருகாமையில் உள்ள பாலம் சேதமடைந்து காணப்படுவதால் அவ்வழியால் பயணிப்போர் பல்வேறு இடர்பாடுகளை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த பாலமானது வட்டக்கச்சி, கல்மடு , இராமநாதன்புரம் ஆகிய இடங்களுக்கு பயணிக்கும் வீதியிலேயே காணப்படுகின்றது.

இவ்வழியாக தினமும் கல்மடு நகர், கிளி/ இராமநாதபுரம், பாடசாலை மாணவர்கள் , கட்டைக்காடு, புதுக்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது தேவைக்காகப் பயணித்து வருகின்றனர்.



எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த பாலத்தை புனரமைத்து பயணிக்கக்கூடிய வகையில் வீதியை செப்பனிட்டுத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின் றனர். (அ-2-273)

## கிளிநொச்சி வாழ் மக்கள் வாக்களிப்பதில் ஆர்வம்

(கிளிநொச்சி)

நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் ஜனாதிபதி தேர்தல் - 2015 இற்கான வாக்குப் பதிவு வாக்களிப்பு நிலையங்களில் நடைபெற்றது. கிளி. நொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மேற்கு , சிவ நகர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்க ளில் பொது மக்கள் நேற்றைய தினம் சுமுகமான முறையில் தமது வாக்குகளை பதிவு செய்துள்ளனர்.

மேற்படி இடங்களில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் காலை 7 மணியிலிருந்து தமது வாக்குகளை ஆர்வமுடன் பதிவு செய்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் நண்பகல் 12 மணி வரையும் மேற்படி இடங்களில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் 50% வீதத்திற்கு மேற்பட்ட வாக்காளர்கள் தமது வாக்கு களை எவ்வித அசம்பாவிதங்களின்றி செலுத்தினர். வாக்களிப்பு முடிவடைவதற்குள் ஏனையோரும் தமது வாக்குகளை பதிவு செய்வதில் ஆர்வம் காட்டியிருந்தமை அவதானிக்க முடிந்தது. (அ-2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்களை இறைவன் எப்போதும் கைவிட்டு விடுவதில்லை - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பலமான வியூகம் அமைத்ததால் சுமுகமாகத் தேர்தல் நடந்தது

நடக்கும் என்பார் நடக்காது. நடக்காது என்பார் நடந்து விடும் என்பது திரைப்படப் பாடலாயினும் அந்தப் பாடல் வரிகள் கருத்தாழம் மிக்கவை என்பதை மறுதலிக்க முடியாது.

நேற்று எட்டாந்திகதி நம்நாட்டில் நடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வன்முறைகள் கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டதுடன், வாக்களிப்பில் மோசடிகள் இடம்பெறலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் ஜனாதிபதித் தேர்தல் எதிர்பார்ப்புக்களைக் கடந்து சுமுகமாக நடந்துள்ளமை மன ஆறுதலைத் தருகிறது.

நாட்டின் சில மாவட்டங்களில் 80 வீதமான வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளமை ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் மக்கள் கொண்டுள்ள கரிசனைக்குச் சான்றாக அமைக்கிறது.

அதேநேரம் யாழ்ப்பாணம், வன்னி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெற்ற வாக்குப் பதிவுகளும் திருப்தி தருவதாகும்.

ஜனாதிபதித் தேர்தல் என்பது சிங்களவரை ஆட்சித் தலைவராகத் தெரிவு செய்கின்ற தேர்தல். இந்தத் தேர்தலில் நாங்கள் வாக்களித்தால் என்ன? வாக்களிக்காமல் விட்டால்தான் என்ன? என்பது தமிழ் மக்களின் மனநிலை.

இதற்கு மேலாக 2009 ஆம் ஆண்டில் வன்னி யுத்தம் தந்த இழப்புகள் நாட்டின் ஜனநாயகப் பங்களிகளாக எங்களை ஈடுபடுத்துவதற்குத் தடையாகவுள்ளது.

இந்த நிலையிலும் வாக்களிப்பு வீதங்கள் திருப்தியாக இருப்பது மக்கள் பொறுப்புணர்வுடன் நடந்துள்ளனர் என்று பெருமைப்பட வைக்கின்றது.

இவையாவற்றுக்கும் மேலாக நாட்டின் ஏழாவது ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகள் குறைந்த தேர்தலாக அமைந்தமைக்கு, பலரை இவ்விடத்தில் பாராட்ட வேண்டும்.

தேர்தல் என்பது ஒரு ஜனநாயக நடவடிக்கை என்பதால் அது வன்முறைகள் அற்றதாகவே இருக்க வேண்டும். தேர்தலின் போது வன்முறைகள் நடக்குமாயின் அந்த நாட்டில் ஜனநாயகம் இருக்கவில்லை என்றே பொருள்படும்.

எனினும் நேற்று நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கடுமையான வன்முறைகளும் அதன் காரணமாக நாட்டில் பதற்றமும் ஏற்படலாம் என ஊகங்கள் வெளியானப் போதிலும் இவற்றைக் கடந்து தேர்தல் சுமுகமாக நடந்துள்ளமையால், அதற்குக் காரணமானவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்பது நமது நிலைப்பாடு.

அந்தவகையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது மக்கள் மிகவும் விழிப்பாக இருந்ததுடன் காலைப் பொழுதிலேயே தமது கடமையைச் செய்து முடித்தனர்.

மேலாக, தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தேர்தல் சுமுகமாக நடந்தேறுவதில் மிகவும் கவனமாக இருந்தார். அவர் வழி, தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளும் தேர்தல் பணியாளர்களும் அரச சேவையாளர்களும் செயற்பட்டனர்.

இவற்றோடு தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட அமைப்புகள் நீதியான தேர்தல் நடப்பதை உறுதி செய்வதில் கடுமையாகப் பாடுபட்டன.

இவற்றோடு பாதுகாப்பு வழங்கிய பொலிஸாரின் நடுநிலைப்பணி என்பனவும் தேர்தல் சுமுகமாக நடைபெறுவதற்கு உதவிற்று.

ஒட்டுமொத்தத்தில் தேர்தலுக்காக அமைக்கப்பட்ட வியூகம் பெருவெற்றி தந்துள்ளதெனலாம். சுமுகமாக நடந்த வாக்களிப்பானது; மோசடிகளற்ற – நீதியான – நேர்மையான தேர்தல் என்ற பெயரோடு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் அறிவிப்பு, அதன் அடிப்படையிலான பதவியேற்பு என்பது வரை சுமுகமாக அமைய இறையருள் உதவட்டும்.

# கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளனர் மக்கள்

## —— மாவை எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக் கொண்டதற்கு இணங்க தமிழ் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

கொல்லன்கலட்டி தமிழ்க்கலவன் பாடசாலையில் தனது மனைவியுடன் சென்று வாக்களித்த பின்பு ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களை பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களிக்குமாறு கோரியிருந்தோம். அதற்கமைய மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்ததை அவதானிக்க முடிந்தது.

ஒருசில வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று பார்த்தேன். அதிகளவான மக்கள் வாக்களிப்பதற்காகச் சென்று வருகின்றனர்.

பொது எதிரணியின் வேட்பாளர் வெற்றி பெறுவது நிச்சயம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளினை ஏற்று மக்கள் வாக்களித்தமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்;

எங்கள் வாக்குகளை வேறு ஒருவர் பயன்படுத்தக் கூடாது என்ற வகையில் நாங்கள் வாக்களித்து வருகிறோம். ஆட்சி மாறினால் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் என உறுதியாகச் சொல்ல முடியாது.

பொது எதிரணி ஜனநாயகத்தை நாட்டில் நிலைநாட்டவுள்ளதாக கூறுகின்றது. அது தெற்கில் மட்டுமா அல்லது வடக்கிலும் நிலைநிறுத்தப்படுமா என்பது கேள்விக் குறியாகவுள்ளது எனத் தெரிவித்தார். (எ-4)

## தேர்தலை புறக்கணிப்போம் போலிப் பிரசாரத்தால் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிப்பதாக போலித்துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இத்துண்டுப் பிரசுரங்கள் யாழ்.வடமராட்சிப் பகுதி மற்றும் யாழ்.மாவட்டத்தின் சில வாக்களிப்பு நிலையங்களிற்கு அருகாமையிலும் வீசி எறியப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 7 மணிக்கு பின்பாகவே இத்துண்டுப்பிரசுரங்கள் இனம் தெரியாத நபர்களினால் வீசியெறியப்பட்டுள்ளன.

அத்துண்டுப்பிரசுரத்தில் ஐந்தே நிமிடங்கள் ஒதுக்குங்கள் என தலைப்பிடப்பட்டு வாக்களிக்கச் செல்வதற்கு முன்பாக எம்மை நாமே கேட்க வேண்டிய கேள்விகள் என குறிப்பிடப்பட்டுள்ளன.

என்னுடைய ஆட்சியில் வடக்குக் கிழக்கிலிருந்து படையினர் அகற்றப்படமாட்டார்கள் என்கிறார் மைத்திரி. இவருக்கு தமிழ் மக்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்? என பல வாசகங்கள் எழுதப்பட்டு தமிழரசுக்கட்சியின் சின்னமும் அச்சிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே விசாரணைகளினை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை ஏற்கெனவே போலியான வதந்திகளினை நம்ப வேண்டாம் என அறிவித்துள்ள கூட்டமைப்பு இத்துண்டுப்பிரசுரம் தொடர்பில் தமக்கு சம்பந்தம் இல்லை என கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். (எ-4)

## புத்தளையில் கைகலப்பு

(கொழும்பு)

புத்தளையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு இடையில கைகலப்பு ஏற்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வாக்கு பெட்டிகளை கொண்டுச் செல்லும போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அந்நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

## வாகன விபத்தில் மூவர் காயம்

(முக்கொம்பன்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்தனர்.

நேற்று மதியம் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு அருகில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மீசாலைச் சேர்ந்த எஸ். தர்சன், கெற்பெலியைச் சேர்ந்த சீலன் மற்றும் பழனிவேல் விஜயரூபன் ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

விஜயரூபன் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக நுணாவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-283)

### அமைதியின் சொற்கள்

என் செய்தி உணர்ந்து பாருங்கள் என்பதுதான். அதைப்பற்றி பேசுவது மட்டுமல்ல, ஆராய்வது மட்டுமல்ல, அதற்குக் காரணம் கொடுத்து நியாயப்படுத்தப் பார்க்காமல், உணர்ந்து பார்க்க வேண்டும். *(பிரேம் ராவத்)*

## வாகன விபத்து இளைஞர் பலி

(கொழும்பு)

கம்பஹா, மஹவிட பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று பிறிதொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டவேளை முன்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளாகியதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தெல்கொட, உடுபிட பகுதியைச் சேர்ந்த 26 வயதான இளைஞராகும்.

சம்பவத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி கைது செய்யப்பட்டு, கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். (எ-11)

## ஐ.தே.க செயற்பாட்டாளரை தாக்கினாராம் அமைச்சர்

(கொழும்பு)

வனவள அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தாக்கியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

பிபிலை ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் முன்னணி அழைப்பாளர் புன்சந்த மஹகும்புர என்பவரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

பிபிலை பொலிஸ் நிலையத்தில் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

பட்டாசு கொளுத்திய போது இவ்வாறு தாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, மஹகும்புர தம்மைத் தாக்கியதாக அமைச்சர் விஜயமுனி சொய்சா பொலிஸ் நிலையத்தில் மற்றுமொரு முறைப்பாட்டை செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-11)

### இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

**நல்லவருடன் சேருங்கள்**

★ ஒருவன் நாள் ஒன்றுக்கு இரு முறையாவது பாவமன்னிப்பு கேட்கவில்லையானால் அவன் தன்னுடைய ஆத்மாவுக்கு தீமை இழைத்து விட்டான்.

★ இவ்வுலக வாழ்வில் மதிமயங்காமல் வாழு. அல்லாஹ் உன்னை நேசிப்பான்.

★ யார் சொன்ன வாக்குப்படி நடக்கவில்லையோ அவன் உண்மை முஸ்லிம் அல்ல.

★ கெட்ட கூட்டத்தாருடன் இருப்பதை விட தனிமையாக இருப்பதே மேல். தனிமையாக இருப்பதை விட நல்ல கூட்டத்தாருடன் இருப்பதே மேல்.

★ நீங்கள் எவர்களுடன் சேர்ந்து வாழுகின்றீர்களோ அவர்களுடனே நாளை மறுமையிலும் சேர்ந்து இருப்பீர்கள்.

★ உங்களுடைய இதயத்தை சூழ்ச்சி, பொறாமை என்ற இரு விடயங்களைவிட்டு பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

★ மனிதர்களைப் பார்த்து வெட்கப்படுவதை விட அல்லாஹ்வுக்கு வெட்கப்படுவதே உயர்வானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில்

தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், வியாபார முகாமைத்துவம் மற்றும் மென்பொருள் வடிவமைப்பு கற்கை நெறிகளுக்கு முதல்வன்

## ESOFT METRO COLLEGE

தற்பொழுது கொழும்புத் தலைமைக்காரியாலயத்தின் வழிகாட்டலின் கீழ் கண்டி மற்றும் கொழும்பு விரிவுரையாளர்களினால் கற்கைநெறிகளைப் போதிக்கின்ற நிறுவனம்

**ESOFT இனை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?**

- சர்வதேச ரீதியாகவும், இலங்கையில் எப்பாகத்திலும் எந்த ஒரு அரச, தனியார் நிறுவனமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்.
- கல்வி கற்ற மாணவர்கள் தொழில்சார் தகைமைகளுடன் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயர் சம்பளத்துடன் வேலைவாய்ப்பைப் பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.
- 430 ற்கு மேற்பட்ட அரச பாடசாலை ஆசிரியர்களிற்கு Ministry of Education மூலமாக யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி கிளிநொச்சியிலும் ICDL கல்வியை போதித்த நிறுவனம்.
- Edexcel UK நிறுவனத்தால் கடந்த வருடம் சிறந்த கல்விச் சேவைக்காக "தங்கவிருது" பெற்ற நிறுவனம்.
- கிளிநொச்சியில் வலுவான சர்வதேச தரக்கற்கைநெறிகள்( Edexcel Assured 'Programmes) எம்மிடமிருந்து மட்டுமே!
- சென்ற ஆண்டில் மட்டும் கிளிநொச்சியில் 340 மாணவர்களை உள்வாங்கிய பெருமை.

**சாதாரண தர மாணவர்களுக்கு மத்தியில் மிகவும் பிரபல்யமான இரட்டை டிப்ளோமா**




Diploma in Information Technology

Diploma in English

இக் கற்கை நெறிகளுக்கு வங்கித் துறைசார் கற்கைநெறிகளை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

இச் சலுகை தை மாதம் 15ம் திகதி வரை மட்டுமே....!

(சி-9763)

அனைத்து டிப்ளோமாவிற்கும் 2 சான்றிதழ்கள்

ESOFT மற்றும் Edexcel UK

assured by PEARSON

அனைத்து டிப்ளோமா பாடநெறிகள் பிரித்தானிய PEARSON EDEXCEL நிறுவனத்தினால் தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது

**புதிய பிரிவுகள் ➤ 12.01.2015 | 14.01.2015**

பதிவுகளுக்கு உங்கள் பெயர் விபரங்களை கீழ் தரப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்

*SMS your Details* ➤ **077 55 888 95**

ESOFT Shaping Lives, Creating Futures.

**ESOFT METRO COLLEGE**

No.01, Kanagapuram Road, (Old Market), Kilinochchi

Hotline : 07755 888 95 | Tel : 021 568 9444

இலங்கையின் மிகப்பாரிய உயர்கல்வி வலையமைப்பு



## பொருளியல்

**A/L Day Class**

**S.ஜெயகுமார்**

[B.A (Hons) Eco.Spl., M.A in Eco. (Pera)]

திங்கள் முதல் வெள்ளி வரை

ஆரம்பம்: 12.01.2015 காலை 6.30 மணி

(9609) **DCM - யாழ் நகர்**



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## சின்னப்பு அல்பிரட்

*அன்னை மடியில் : 13.04.1952*

*ஆண்டவன் அணைப்பில் : 11.12.2014*

11.12.2014 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும் பல வழிகளில்உதவி புரிந்தவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம். நாளை 10.01.2015 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில்நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் யாவரையும் அழைத்து நிற்கின்றோம்.

*இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்*

சென்.செபஸ்ரியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு.
0772416832

தகவல் :
குடும்பத்தினர்

(சி-9767)




## Regd No.DS/589, Kiruba Learners, Govt. Approved A Grade Driving Training School

**(அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதி பயிற்சிப் பாடசாலை)**

**தொ.பேசி : 021 222 4353, 021 492 3200, 077 722 5292**

- தவணைமுறைக் கட்டணம்
- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம்.
- விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்யப்படும்
- கனரக வாகனம் (AD) பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி.
- எழுத வாசிக்க தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு.
- இரவு நேர வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- ஓடத் தெரிந்தவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற ஒழுங்கு செய்யப்படும்.
- அரச தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சியை மேற்கொள்ள முடியும்.



(சி-9766)

*பெண்களுக்கு பெண் பயிற்றுவிப்பாளர்களால் பயிற்சி வழங்கப்படும்*

LEARNER DRIVER

# கிருபா லேணர்ஸ்

**இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**வவுனியாவில்...**

இல.216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி தியேட்டருக்கு முன்பாக)
024 222 7777,
077 710 0444

பருத்தித்துறை : 0214923201, 0714546958 - சாவகச்சேரி : 0214923202, 0212270700 - சுன்னாகம் : 0212242022, 0714546956 - விசுவமடு : 0213201515, 0714546955 - கிளிநொச்சி : 0212285505, 0714546955 - நெல்லியடி : 0213006550, 0714546957 - யாழ்.கச்சேரி அருகாமை : 0767225292, 0717775454 - மன்னார் : 0232251656, 0778472732


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையில் சுட உத்தரவிட்ட தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

வாக்களிப்பு ஒருவருடைய விருப்பமாகும் அந்த விருப்பத்தை பலவந்தமாகவோ அல்லது கள்வாகவோ அபகரிக்க முடியாது என்று தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, கள்ளவாக்கு போடுவதற்கு யாராவது வந்தால் அவருடைய தலையில் சுடுமாறு பொலிஸாருக்கு பணித்திருத்தார்.

நேற்று தேர்தல்கள் செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸாருக்கு ஆகக்குறைந்த பலத்தை பயன்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனினும் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தால் முழங்காலுக்கு கீழே சுடுவதற்கு பொலிஸாருக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதா? என்று ஊடகவியலாளர் வினவினார்.

ஆகக்குறைந்த பலம் என்று ஒன்றுமில்லை. தற்போது தேவையானது அவசியமான அதிகாரமேயாகும். கள்ளவோட்டு போடுவதற்கு வருகின்றவர்களின் முழங்காலுக்கு கீழ் சுடுவதனால் எந்த பிரயோசனமும் இல்லை. முழங்காலுக்கு கீழ் சுட வேண்டிய அவசியமில்லை.

கள்ளவாக்கு போட்டுவதற்கு வந்தால் அல்லது குழப்பங்களை விளைவிக்க முயற்சித்தால் அவ்வாறானவர்களின் தலையில் சுடவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (செ-11)

# தொலைக்காட்சியை எச்சரித்த உதவித் தேர்தல் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து செயற்படும் தொலைக்காட்சி ஒன்றுக்கு யாழ்.மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் நேற்று எச்சரிக்கை விடுத்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது..

வாக்களிப்பிற்கான நேரம் மாலை 4 மணியுடன் முடிவுற்ற நிலையில் அது 6 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக தொடர்ச்சியாக இத்தொலைகாட்சி செய்திகளை ஒளிபரப்பியது.

இதன் மூலம் வாக்காளர்களை குழப்பமடைய செய்வதுடன் அவர்கள் குறித்த காலப் பகுதியினுள் வாக்குசாவடிகளிற்கு செல்வதை தடுப்பதே நோக்கமென தெரிவித்து உதவித் தேர்தல் ஆணையாளரிடம் முறையிடப்பட்டது..

இந்நிலையினில் குறித்த புகாரின் அடிப்படையினில் உதவி தேர்தல் ஆணையாளர் ஒளிபரப்பினை நிறுத்த உத்தரவிட்டார்.

நடந்து முடிந்த மாகாணசபை தேர்தலிலும் இதே பாணி பிரசாரங்களையே இத் தொலைக்காட்சி முன்னெடுத்ததாக சுட்டிக் காட்டப்பட்டது.

இதேவேளை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணத்தில் 20 வீத வாக்குப்பதிவே இடம்பெற்றதாகவும் இத் தொலைக்காட்சிசெய்தி வெளியிட்டதாகவும் முறையிடப்பட்டுள்ளது. (எ-11)

## வாக்களிப்பு...

கண்காணிப்பு அமைப்புகளான கபே மற்றும் பவ்ரல் ஆகிய அமைப்புகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு தேர்தல் திணைக்களத்திடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் இச்சம்பவத்தின் பின்னரும் மக்கள் துணிவுடன் சென்று வாக்களித்ததனை அறிய முடிந்தது.

இதேவேளை ஊர்காவற்றுறைப் பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிக்குமாறு வாக்களிக்கச் சென்றவர்களை இனந்தெரியாத நபர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

ஆளும் அரசின் ஆதரவாளர்கள் சிலர் வாக்களிப்பு நிலையங்களுக்கு 500 மீற்றர் தூரத்தில் நின்று கொண்டு வாக்களிக்கச் சென்றவர்களிடம் மகிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிக்குமாறு இல்லாது போனால் நீங்கள் பாரிய பின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும் எனவும் அச்சுறுத்தியுள்ளதால் வாக்காளர் சிலர் வாக்களிக்காது திரும்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் 24 முறைப்பாடுகளும் கொழும்பில் 53 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-4)

## நாடளாவிய...

ஹெலிகப்டர் மூலம் கொண்டுவரப்பட்டதாக சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 74.78 வீதமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரும் மாவட்ட தெரிவித்தாட்சிகருமான நாகலிங்கம் வேதநாயகம் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் 68.25 வீதமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 71 வீதமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலரும் தெரிவித்தாட்சிகருமான திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

2 வலயங்களின் வாக்குப் பதிவுகள் இதனுடன் சேர்க்கப்படவில்லையெனவும அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் 61.14வீதம், வவுனியா 66 வீதம், கிளிநொச்சி 71 வீதம், முல்லைத்தீவு 73 வீதம், மன்னார் 68 வீதம், திருகோணமலை 72 வீதம், அம்பாறை 70 வீதம், மட்டக்களப்பு 60 வீதம், கண்டி 75 வீதம், மாத்தளை 75 வீதம், காலி 79 வீதம், இரத்தினபுரி 84 வீதம், கேகாலை 75 வீதம், நுவரெலியா 80 வீதம், களுத்துறை 70 வீதம், மாத்தறை 76 வீதம், அம்பாந்தோட்டை 70 வீதம், புத்தளம் 78 வீதம், மொனராகலை 75 வீதம், பொலநறுவை 80 வீதம், கம்பஹா 65 வீதம், பதுளை 61 வீதம், அனுராதபுரம் 78 வீதம், குருநாகல் 77 வீத வாக்குப்பதிவும் இடம் பெற்றுள்ளது. (எ-11)

## வன்முறைகளி...

வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வன்முறைகள் நடக்கலாம் என்று ஏற்கெனவே எதிர்பார்த்திருந்தபடியாலேயே வன்முறைகள் நடக்கவில்லை என்று கூறலாம். இது தொடர்பில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம் என்று 13 வாக்களிப்பு நிலையங்களுக்கு நேரில் சென்றுபார்த்த வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவர் கூறியிருந்தார்.

நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில பாரிய அசம்பாவிதங்கள் எதுவும் பதிவாகவில்லை. சுமுகமான தேர்தல் நடைபெற்று வருவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

அதேவேளை, அக்கறைப்பற்று பகுதியில் ஆளும்கட்சியினருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதுடன் வாகனம் ஒன்று சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் அவ் அமைப்பு கூறியது.

மட்டக்களப்பு வாகரையில் ஆளும் கட்சியினரால் வாக்காளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. மாத்தளை மாவட்டத்தில் ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. ஹல்துமுல்லையில் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் சிலர் வாக்காளர்களை அச்சுறுத்தியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள சில வாக்குச்சாவடிகளில் ஆளும் தரப்பினர் வாக்காளர்களை அச்சுறுத்தியதாக குற்றச்சாட்டு பதிவாகியுள்ளது. நாவலப்பிட்டி, கம்பளை நகரங்களில் வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (எ-11)

# செய்தியை சீர்செய்த தேர்தல் ஆணையாளர்



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு சென்ற தேர்தல்கள் ஆணையாளர், ரூபவாஹினியில் ஒளிபரப்பான செய்தியையும் சீர்செய்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துகொண்டதாக ரூபவாஹினியில் நேற்றுக் காலை செய்தி ஒளிபரப்பானது.

இதுதொடர்பில் சஜித் பிரேமதாஸ எம்.பி, தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டுவந்ததையடுத்தே அங்கு நிலையத்துக்கு விரைந்த ஆணையாளர், நேற்றுக் காலை வெளியான அந்த செய்திக்கு அதே முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்புமாறு பணித்தார். மறுப்பு செய்தி ஒளிபரப்பப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷவுடன் தான் இணைந்து கொண்டதாக வெளிவந்த செய்தி மூலம் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தினமான நேற்று தேசிய ஊடகமான ரூபவாஹினி சஜித் பிரேமதாச மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொண்டதாக செய்தி வெளியிட்டது.

அரச ஊடகமொன்று இப்படி கீழ்த்தரமாக நடந்து கொண்டதன் ஊடாக தனது பெயர் களங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், ஆளுந்தரப்பின் மிலேச்சத்தனமும், வங்குரோத்தும் மிக்க இதுபோன்ற செயற்பாடுகள்தான் நாட்டின் ஜனநாயகத்தை களங்கப்படுத்திக் கொண்டிருப்பதாகவும், இதனை பொதுமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (எ-11)

## கொழும்பில்...

யோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அலரி மாளிகையைச் சுற்றி விசேட பொலிஸ் குழுக்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட எவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட மாட்டாது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன நேற்று மாலை தெரிவித்துள்ளார். அலரி மாளிகையைச் சுற்றி திடீரென ஏன் இவ்வளவு பொலிஸார் குவிக்கப்பட்டு விசேட பாதுகாப்பு வழங்கப்படுகின்றது என்பது பற்றிய தகவல்களை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வெளியிடவில்லை. (எ-11)

## வவுனியாவில்...

அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பிரதேசத்தில் பதற்றமான சூழ்நிலை நிலவியது

இதேவேளை நேற்று காலை வவுனியா குருமன்காடு பிரதேசத்தில் வாக்களிக்கச் செல்லும் மக்களை, நீல நிற டிபெண்டர் ரக வாகனத்தில் சென்ற சிலர் தடுத்து வந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-250)

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532





ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கப்பட்ட வாக்குப் பெட்டிகள் நேற்று மாலை யாழ்.மத்திய கல்லூரிக்கு வந்தடைந்த போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லப்டொப் தேவை

நல்ல நிலையில் உள்ள பாவித்த லப்டொப்கள் (Laptops) தேவை

Call-0779086737

**GUNAA BEST PC**

52,Hospital Road, Jaffna



## பாலர் பாடசாலை ஆசிரியர் பதவி வெற்றிடம்

AHEAD Trust நிறுவனத்தின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலைக்கு தமிழ், ஆங்கில மொழியிலான ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

**இல.40 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**

தொலைபேசி இல:-0213202545/ 0778841375

(9092)



கற்பிப்பதற்கான பதவி வெற்றிடம்

**ரலண்ட் அக்கடமி 077 2140 675**

(மல்லாகம் சந்திக்கு கிழக்குபுறமாக)

பிரிவு : 02 இற்கான ஆசிரியர் இணைப்பு

**தரம் - 09, 10, 11 வகுப்புகளிற்கு:**விஞ்ஞானம்,வரலாறு, புவியியல், விவசாயம், சங்கீதம், மனைப்பொருளியல்.

**தரம் - 01 - 05 வரை :** புலமை வகுப்பு (பயிற்றப்பட்ட ஆசிரியர்), தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்.

**ஏனைய பதவி வெற்றிடம் :-** கொம்பியூட்டர் ரைப்பிங் (பெண்), பரிசோதகர் (பெண்)

**தகைமை : பாடசாலை ஆசிரியர், தனியார் கல்வி நிலைய ஆசிரியர், பல்கலைக்கழக மாணவர்கள்.**

(9C89)

காலம் 10.01.2015 (சனி), 11.01.2015 (ஞாயிறு) காலை 8.30 - 10.00 மணிவரை நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்



2 மணித்தியாலத்தில்

## கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்

0779086737 Computer Repair

GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.



THE SCIENCE CORNER

Clock Tower Lane Jaffna

# A/L-2017

**கணித, உயிரியல் பிரிவுகள் ஆரம்பம்**

**10.01.2015 சனிக்கிழமை காலை 8.00**

**ஆசிரியர்கள்**

PHYSICS: திரு. M.ஸ்வெல்மன் (BSc)

CHEMISTRY:திரு. S.சுரேஸ்குமார் (BSc)

திரு. T.லக்ஷன் (BSc)

COM MATHS: திரு. B.மயூரன் (BSc)

BIOLOGY:திரு. MM.அல்போன்ஸ் (BSc)

திரு. DA ஜக்ஷன் (BSc)

ஆரம்பத்தில் இருந்து முழுமையாக கற்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்

## A/L-2015, A/L-2016

வகுப்புக்களும் நடைபெறுகின்றன

(9049)

TP.No:-0776116724



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



Architectural CAD Centre

Personal - Group - Visiting Classes

Jaffna - Vavuniya - Colombo

Diploma in Engineering Drawing &

# Auto CAD

Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)

Cert. in Auto CAD [Software (2D &3D)]

University of Peratheniya

Cert. in Auto CAD [Advance 3D - Modeling]

University of Moratuwa

Contact No:0718617972

(சி-9763)



**அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள்**

குறைந்த கட்டணத்தில் முற்பணமின்றி உங்கள் இல்லத்திற்கே பயணச்சீட்டுக்கள் கொண்டுவந்து தருகிறோம்

அனைத்து நாடுகளிற்குமான வீசா ஆலோசனைகள், online,விண்ணப்பப்படிவங்கள்,

நிராகரிக்கப்பட்ட -Rejected visas துறைசார், சட்டவல்லுனர்களின் உதவியுடன் செய்து தரப்படும்

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்களின் இலங்கை வீசா நீட்டிப்பு

கொழும்பு செல்லவேண்டிய தேவையின்றி எமது அலுவலகங்களிலேயே செய்து தரப்படும்

கட்டார்,மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வோருக்கான விமானப்பயணச்சீட்டுக்கள் மற்றும் பயண ஒழுங்குகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்

## V2 Travels and Tours

- மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 மாத பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்புக்கள்
- எம்முடன் இணைந்து தொழில்செய்ய விரும்பும் முகவர்கள், தனிநபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்

**அனைத்து நாடுகளிற்குமான விரைவு பொதிகள் சேவை**

எந்த நாட்டிற்கும் உணவு, கருவாடு,எண்ணெய் வகைகள் என எல்லாவகை பொருட்களையும் மிகவும் குறைந்த கட்டணத்திலும் விரைவாகவும் அனுப்பிக்கொள்ளலாம்

யாழ்மாவட்டம்,கிளிநொச்சியில் எந்தப்பிரதேசமாக இருப்பினும் உங்கள் வீடுகளில் தராசுடன் வந்தே பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்

வீடுகளில் பெற்றுக்கொள்ளப்படும் பொதிகளுக்கு மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது


5Kg க்கு உட்பட்ட பொதிகளுக்கு பெட்டிநிறை சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வல்வெட்டித்துறை |
| --- | --- | --- |
| 9/A சர்ச் லேன், பொது நூலகம் முன்னால் | முடக்காட்டுச்சந்தி | யாழ்வீதி - வல்வெட்டி |
| 0773867257 | 0776699892 | 0776697960 |


## மரண அறிவித்தல்

# தங்கராசா ஜெயராசா

## (ஜெயராசா படமாட உரிமையாளர்)



ஓடக்கரை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா ஜெயராசா அவர்கள் நேற்று (08.01.2015) வியாழக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், சுந்தரச்செல்வம் ஆகியோரின் அன்பு மருமகனும், கலாதேவியின் அன்புக் கணவரும், றம்யா, ஜனஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபானந்தின் அன்பு மாமனாரும், சிவராசா, சௌந்தராசா, ஈஸ்வரியம்மாள், காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்பு சகோதரரும், சுந்தரதேவன், கௌரிதேவி, குமாரதேவன், காலஞ்சென்றவர்களான ஞானதேவன், வாசுதேவன் மற்றும் வச்தலாதேவி, விஷ்ணுதேவன், வாமதேவன், பிருந்தாதேவி, பாமினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஓடக்கரை, பருத்தித்துறை**

**0779791046**

(சி-9770)

**தகவல்:குடும்பத்தினர்.**


தென்னிந்திய

# திருத்தல யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஊடான திருத்தல யாத்திரை

**நாட்கள் 15+1 யாத்திரிகர்கள் 10**

**ஆரம்பம் 20.01.15 To 04.02.15**

உச்சிப்பிள்ளையார், 9 நவக்கிரக ஆலயங்கள், திருப்பதி, மேல்மருவத்தூர், ஆறுபடைவீடுகள், பொற்கோவில், வைரவன்பட்டி, பட்டீஸ்வரம், குருவாயூர், பத்மநாதசுவாமி, கன்னியாகுமரி, பஞ்சபூதத் திருத்தலங்கள், பிள்ளையார்பட்டி, இராமேஸ்வரம், 23 புனித தீர்த்தம் நீராடல், பிரம்மா கோவில், மைசூர் சாமூண்டீஸ்வரி, மணக்குழவிநாயகர், ஸ்ரீபாலசுப்பிரமணியர் கோவில், மலைமேல் சனி பகவான் உட்பட65க்கும் அதிக ஆலயங்களைத் தரிசிப்பதுடன், மரீனா பீச், MGR, அண்ணா நினைவிடங்கள், மைசூர் பிருந்தாவனம், பாலஸ், பூம்புகாரும் பாண்டிச்சேரி பீச்சும் காணலாம்.

மேலும் யாத்திரை சென்று திரும்பும்வரை நாங்களும் கூடவே வருவோம். சகல ஆலயங்களுக்கும் உள்ளே அழைத்துச் சென்று அழைத்துவருவோம்.

சென்னையில் ஒரு நாள் சொப்பிங்

**பெற்றுக் கொண்ட பணத்திற்கான எமது சேவை**

இருவழி விமான ரிக்கெட், எயார்போட் போக வர வாகன வசதி, மூன்றுவேளை உயர்தர சைவஉணவு, நாளொன்றுக்குஒரு லீற்றர் மினரல் வோட்டர், 2 பேருக்கு கட்டில் மெத்தை வெந்நீருடன் இணைந்த அறைகளில் தங்க வைக்கப்படுவீர்கள், யாத்திரை முடியும்வரை AC வாகன வசதி, சகல ஆலய நுழைவுக் கட்டணங்கள் உட்பட எமது பொறுப்பு.

மேலும் எமது தனிப்பட்ட சேவையாக ஆலயங்களில் குறுப்பாக எடுக்கும் 60 புகைப்படங்களும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு

கலாநிதி

## T. ஸ்ரீரெங்கநாதன்

59.3/6, சிற்றி சென்றர் சொப்பிங் கொம்பிளக்ஸ், செட்டியார் தெரு, கொழும்பு - 11

**T.P 0777680102**

யாழ்ப்பாணத்தில்

S. ராஜன்

**0777362154**

(சி-9758)



# நிலப்பதிப்புக்கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு

Interlock Paving Stones





யாழ்ப்பாணம்

வவுனியா

## பிரணவன் என்ரபிறைசஸ்

635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சங்கிலியன் சிலைக்கு முன்)

**077 3818799**

(சி-9757)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட, யாழப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.